Registered at the C. P. O. as a Newspaper    வாரப் பதிப்பு    விலை ... 15

# ஈழநாடு

பரன்    National Tamil Daily    தேசிய தினசரி    தபாற் பெட்டி எண்: 49

மலர் 6    யாழ்ப்பாணம்    சோபகிருது மாசி 11ஆம் நாள்    ஷவ்வால் பிறை 8    (23-2-64)    ஞாயிற்றுக்கிழமை    இதழ் 13




# சூ-என்-லாய் இந்தியா செல்வார்?

## நேருவைச் சந்திக்க ஆவல்; இந்திய அனுமதிஇன்னும் இல்லை

(நமது கொழும்பு நிருபர்)

கொழும்பு, சனி

நவசீனப் பிரதமர் சூ-என்-லாய் இம்மாதம் 26-ந் திகதி இலங்கைக்கு வருகிறார். இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு திடீர் விஜயம் செய்ய அவர் ஆவல் கொண்டிருக்கிறார் எனத்தெரிய வருகிறது. 'இலங்கை விஜயத்துக்குப் பின் ஆசியாவில் இன்னுமொரு நாட்டுக்குச் செல்ல விருக்கிறேன்' என்று சூ-என்-லாய் தெரிவித்திருக்கிறார். ஆசியாவிலுள்ள பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்குச் செல்லாமல் தமது ஆசிய சுற்றுப் பிரயாணம் பூர்த்தியடையாதென அவர் கருதுவதாகத் தெரிகிறது.

இதேசமயம் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நேருவை சந்தித்து பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துமாறு சூ-என்-லாய் கேட்டுக்கொண்டதாகவும் அந்த முயற்சியை பர்மிய அதிபர் ஜெனரல் நே வின்னும் நேபாளமும் செய்து வருவதாகவும் ராஜீய வட்டாரங்களில் கூறப்படுகிறது. "இந்திய-சீன எல்லைத் தகராறுக்குச் சுமுகமான தீர்வு காண கொழும்பு நாடுகள் தெரிவித்தயோசனையை சீனாவும் ஒப்புக்கொண்டால்தான் சூ-என்-லாயைச் சந்திக்க முடியும்" என்று பிரதமர் நேரு தெரிவித்து விட்டதாகவும் அறியப்படுகிறது. இந்தியப் பிரதமரைச் சந்திப்பதன் மூலம் கொழும்பு மகாநாட்டு யோசனையை சீனா ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்படுத்திக்கொள்ளலாமென்றும் கொழும்பு யோசனையில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேசவேண்டுமென்பது ஒரு அம்சமென்றும் சீன ராஜீய வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் அறியப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இப்பொழுது ஆசிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் சீனப் பிரதமர், தமது சுற்றுப்பிரயாணத்தின் போது இந்தியாவுக்குள் செல்வாக்கையும் இந்தியா மீது ஆபிரிக்க நாடுகளுக்கு அனுதாபமிருப்பதையும் உணர்ந்து கொண்டாரென்றும் இதனால் தான்

(10-ம் பக்கம் பார்க்க)

# வித்தியோதய பல்கலைக்கழகத்தில் பெரும் கைகலப்பு

## மாணவிகளை சேர்ப்பதில் எழுந்த கருத்து வேறுபாடு காரணம்

கொள்ளுப்பிட்டி, சனி

கங்குடுவலவிலுள்ள வித்தியோதய பல்கலைக் கழகத்தில் இன்று பௌத்த பிக்குகளுக்கும் சாதாரண மாணவர்களுக்குமிடையில் பலத்த கைகலப்பு ஏற்பட்டது. இக்கைகலப்பில் பலர் காயமடைந்தனர். ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இன்று மாலை 4மணியளவில் இடம்பெற்ற இக்கைகலப்பை அடக்குவதற்கு ஆயுதம்தாங்கிய பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து வந்து ஒழுங்கை நிலைநாட்டினர்.

இக்கைகலப்பில் இரும்புக் கம்பிகள், கற்கள் ஆகியன பாவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வித்தியோதய பல்கலைக்கழகத்தில் மாணவிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனும் கோரிக்கைக்கு சாதாரண மாணவர்கள் ஆதரவுதேடும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இதை பிக்குகள் கடுமையாக ஆட்சேபித்தார்களென்றும் இதைத்தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இங்கு ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக வித்தியோதய பல்கலைக்கழகம் ஒருவாரத்துக்கு மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். புதிய தபாற்கந்தோரை தபால்மந்திரி திறந்துவைப்பார்?

## திறப்புவிழா மார்ச்சில் நடைபெறலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் தபாற்கந்தோரை தபால் மந்திரி திரு. எம். பி. டி' இசற் சிறிவர்த்தன அடுத்த மாதம் முதற் திகதி திறந்துவைப்பார் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. புதிய கட்டிடத்தை பொதுமராமத்து பகுதி நிர்வாக என்ஜினியர் இம்மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் மாவட்ட சுப்பிரிண்டனிடம் ஒப்படைப்பார் என்றும் புதிய தபாற்கந்தோர் அநேகமாக அடுத்த மாதம் முதல் வாரத்தில் திறக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

# மும்மொழிகளிலும் அலுவல்கள்!

## சபாநாயகரின் முன்மாதிரி

கொழும்பு, சனி

ஜனப்பிரதிநிதிகள் சபையின் புதியசபாநாயகர் திரு. ஹியூபெர்னாண்டோ தமது அலுவல்கள் எல்லாவற்றிலும் தமிழுக்கு உரிய அந்தஸ்தளிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

சபை நிர்வாகத்தில் எந்த இடங்களில் தமிழ் உபயோகிக்கப்படவேண்டியுள்ளதோ அவைகளில் எல்லாம் தமிழ் உபயோகிக்கப்படவேண்டுமென்றும் தமது அந்தரங்க காரியதரிசியைக் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமது கொள்கையை அமுல் நடத்தும் வகையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் விருந்துபசார வைபவத்தில் கலந்துகொள்ள வரும்படி பாராளுமன்ற, செனட்சபை உறுப்பினர்களுக்கெல்லாம் வரவேற்புக்களையெல்லாம் மூன்று மொழிகளிலும் அனுப்பி வைத்திருக்கிறார். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளிலும் வரவேற்பிதழ்கள் அச்சிடப்பட்டுள்ளன. தமிழில் அச்சிட்டதோடு மாத்திரம் நின்றுவிடாது முகவரிகளையெல்லாம் தமிழிலேயே எழுதி தமிழ் எம். பி. க்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

சபாநாயகர் திரு. பெர்னாண்டோவுடைய இவ்விருந்துபசாரம் அவரது உத்தியோக வாசஸ்தலமான "மும்தாஜ் மகாலில்" திங்களன்று நடைபெறவிருக்கிறது.

சபாநாயகருடைய தமிழ் உபயோக நடவடிக்கையை தமிழரசுக்கட்சியினர் பலர் பாராட்டியுள்ளார்கள். திரு. பெர்னாண்டோ சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட தினத்தில்; பார்லிமெண்டில் தமிழிலும் பேசியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சபாநாயகர் கட்சிப்பற்றற்றவராக இருப்பவராகையால் தமிழரசுக்கட்சியினர் இவ்விருந்துவைபவத்தில்கலந்துகொள்வார்கள் என தமிழரசுப் பிரமுகர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

# மேற்குஜெர்மன் உதவி நிறுத்தப்பட்டது

கொழும்பு, சனி

மேற்குஜெர்மன் அரசாங்கம் இனிஇலங்கைக்கு அபிவிருத்தி திட்டங்களில் உதவிஅளிக்க மாட்டாது என மேற்கு ஜெர்மன் தலைநகரான பொன்னிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டுளளதாக அறியப்படுகிறது.

முன்னர் உடன்பாடு தெரிவிக்கப்பட்ட உதவிகள் நிறுத்தப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# கஸ்தூரிபாய்க்கு அஞ்சலி

புதுடில்லி, பெப். 22

மகாத்மாகாந்தியின் உற்ற துணைவியான அன்னை கஸ்தூரிபாயின் நினைவுதினம் இன்று பாரதத்தின் பலபகுதிகளில் கொண்டாடப்பட்டது.

இன்று அவரது ஞாபகார்த்தமாக அவரது உருவப்படம் கொண்ட முத்திரைவெளியிடப்பட்டது.

இந்திய-சீன

# எல்லைப் பிரச்சினை பற்றி சிறிமா - சூ பேச்சுவார்த்தை

## கொழும்பில் நடைபெறலாம்

கொழும்பு, சனி

சீனப்பிரதமர் சூ-என்-லாய் இம்மாதம் 26-ம் திகதி இலங்கை வரும்போது இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா இந்திய-சீன எல்லைப்பிரச்னை குறித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவாரென நம்பப்படுகிறது.

திரு. சூ-என்-லாய் இங்கு 29-ம் திகதிவரை தங்கியிருப்பார். 1957-ம் வருடத்தில் சூ-என்-லாய் இங்கு வந்திருந்தபோது பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார். ஆனால் இம்முறை அவர் தங்கியிருக்கும் நான்கு நாட்களிலும் அதிக இடங்களுக்குச் செல்லமாட்டாரென அறியப்படுகிறது. காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவின் சமாதிக்கு மலர்வளையம் சாத்துவதற்காக மட்டுமே கொழும்பைவிட்டு வெளியே ஹொரகொல்லைக்கு செல்வார். சீனப்பிரதமர் இலங்

(10-ம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

"அத்திரி" எழுதுகிறார்

[23-2-1964 தொடக்கம் 29-2-1964 வரை]

**மேடம்**

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்தவார ஆரம்பத்தில் எந்தக் காரியத்திலும் மிகவும் கவனமாகயிருப்பீர்கள். எந்த விஷயத்திலும் அக்கிறையில்லாமல் நடந்துகொள்ளமாட்டீர்கள். உங்கள் பொறுப்பை மற்றவர்களை நம்பி ஒப்படைக்கத் தயங்குவீர்கள். இப்படி நீங்கள் நடந்துகொள்வதால் பின்னுக்குச் சந்தோஷத்தையும் சுகத்தையும் அடைவீர்கள். உங்கள் தொழில் முன்னேற்றத்துக்கு பழைய அனுபவங்கள் உங்களுக்கு உதவியாகவிருக்கும். சனிக்கிழமையில் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் பிடிகொடுக்காமல் நடப்பது நல்லது.

**இடபம்**

(கார்த்திகை 2 3 4-ம் பாதங்களிலும் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் நிலங்களில் அதிகமான பணத்தை முதலீடு செய்யாதீர்கள. கட்டுக்குப் பணம் எடுக்கவோ அல்லது கொடுக்கவோ இந்த வாரம் உகந்ததல்ல. பண விஷயத்தில் பொறுப்புகிற்க ஒப்புக்கொள்ளாதீர்கள். உங்களுடைய ஆசைகளை இந்த வாரத்தில் அடக்கிக் கொள்வது நல்லது. இல்லையேல் பெரும் நஷ்டங்களை விளைவிக்கும். உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் இந்தவாரத்தில் அடிக்கடி தலைகாட்டும். உங்கள் முன்னோரின் சொத்துக்களினால் வார மத்தியில் சில சச்சரவுகள் தோன்றக்கூடும்.

**மிதுனம்**

(மிருகசீரிடம் 3, 4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) மிகவும் கஷ்டமான வேலையொன்று இந்த வாரத்தில் உங்களை காத்திருக்கிறது. அது மிகவும் சங்கடத்தை தரும். இந்த வாரத்தில் ஆரம்ப நாட்களில் அதிகம் கடினமான உழைப்பின் மூலம் காரியசாதனை ஏற்படுத்த வேண்டிவரும். எந்த விதமான கஷ்டத்திலும் நீங்கள் எண்ணியதை அடைவீர்கள். உங்களுக்கு வார இறுதியில் முன்னேற்றமும் செல்வாக்கும் கீர்த்தியும் அதிகரிக்கும். வார இறுதியில் நட்புறவால் சில நன்மைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பும் சந்தர்ப்பமும் கிட்டும்.

**கடகம்**

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியத்தில் ஜனனமானவர்களுக்கு) பணவிஷயமாக கவனிக்குமிடத்து இந்த வாரத்தில் நன்மையான பலன்கள் தென்படுகின்றன. சனிக்கிழமையளவில் உங்களுடைய சொந்த விவகாரங்கள் சில குழப்பத்தையும் கவலையையும் தரும். எதையும் சுத்தமாகச் சிந்தித்து செயலாற்றவேண்டும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உங்களைச் சிந்திக்க விடமாட்டாது. மிகவும் ஜாக்கிரதையாக கடமைகளைச் செய்யவும். நீங்கள் நினைத்த அளவுக்கு பணவருவாயில்லாவிட்டாலும் நிலைமையை ஓரளவு சமாளிக்கலாம்.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் ஆரம்பத்திலேயே சில குழப்ப நிலையை எதிர்பார்க்கலாம். உங்கள் குடும்பத்துக்குள்ளும் சில குழப்ப நிலைமைகள் ஏற்படும். உங்களுக்குகீழ் உள்ளவர்களின் கீழ்ப்படிவில்லாத நடத்தையால் நீங்கள் பொறுமை இழக்கநேரிடும். உங்களுடைய சொந்தக் காரியங்களே தாமதத்தில் நடைபெறும். உங்களுக்கு பெரும் பாரமாக இருந்த பொறுப்பொன்று வருகிற சனிக்கிழமை அளவில் உங்களை விட்டுப் போகும். செலவினங்களை கட்டுப்படுத்தி நடந்துகொள்வது நன்மை.

**கன்னி**

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய தொழிலில் உங்களுக்கு இந்தவாரத்தில் அலுப்புத்தட்டும். வார இறுதியில் மிகவும் வெறுப்பான முறையில் நடந்துகொள்ளுவீர்கள். எந்த விஷயத்திலும் பொறுட்பேற்று நடக்க உங்களுக்கு மனம் இடம்தராது. வருகிற வெள்ளிக்கிழமையளவில் சில நன்மைகளை எதிர்பார்க்கலாம். பண வருவாயைப் பொறுத்தவரையில் இந்த வாரம் மிகவும் இறுக்கமாக இருக்கும். வரவேண்டிய பணம் ஒன்றையும் இந்தவாரத்தில் எதிர்பார்க்கமுடியாது.

**துலாம்**

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்தவாரத்தில் எதிர்பாராத செலவினங்களினால் மனநிம்மதியையும் அனுவசியமான பேச்சுவார்த்தைகளினால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் பேசும் பொழுது மட்டாகப் பேசுவது நல்லது. நீங்கள் பலவிதமான திட்டங்கள் மனதில் வைத்திருப்பீர்கள் ஆனால் ஒன்றையும் நடைமுறைக்குக் கொண்டுவரமுடியாமல் கஷ்டப்படுவீர்கள். உங்கள் குடும்பத்தினரின் தேகசுகம் இந்தவாரத்தில் மிகவும் பாதிக்கப்படும். குழந்தைகளின் தேகசுகம் எதிர்பாராத விதமாகப் பாதிக்கப்படும். அதனால் மனச் சஞ்சலம் ஏற்படும்.

**விருச்சிகம்**

(விசாகம் 4-ம் பாதத்திலும் அனுஷம், கேட்டையில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் செல்வாக்குக்கு இந்தவாரத்தில் அதிக மதிப்பிருக்கும். உங்கள் உதவியை நாடிவரும் உங்கள் நண்பர்களை நீங்கள் தட்டிக்கழிக்கமுடியாது. எக்காரணத்தைக்கொண்டும் பணச் செலவுக்கு ஏதுவான காரியங்களில் தலைப்போடாதீர்கள். முன் நீங்கள் எதிர்பார்த்த சில பணவரவுகள் இந்த வாரத்தில் உங்கள் கைக்கு வந்துசேரும். உங்கள் மனைவிவழியால் சில தொல்லைகள் வார ஆரம்பத்தில் தலைகாட்டினலும் பின்னுக்கு நிலைமை சீரடைந்துவிடும். புதன்கிழமை உங்களுக்கு மிகவும் அநுகூலமான நாள்.

**தனுசு**

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்திலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் அதிகமான செலவினங்களிருந்துகொண்டே யிருக்கும். உங்கள் குடும்பத்தினரின் போக்கு உங்களுக்கு கவலையையும் வேதனையையும் தரும். உங்களுடைய நிலைமை விளங்காத உங்கள் உறவினர்கள் வீணுக உங்களை நச்சரித்துக் கொண்டிருப்பார்கள். முக்கியமான காரியத்தின் பொருட்டு நீங்கள் சேமித்து வைத்தபணத்தில் கைவைக்கும்படி உங்கள் குடும்பத்தினர் உங்களை நிர்பந்திப்பார்கள். எந்த விஷயத்திலும் நீங்கள் மிகவும் பொறுமையாகவும் சாவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**மகரம்**

(உத்திராடம், 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1, 2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு நெருங்கிய நண்பர் ஒருவருடைய காரியங்களில் தலைப்போடவேண்டிய சந்தர்பங்கள் இந்த வாரத்தில் ஏற்படும். உங்கள் உணவு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஒத்துக்கொள்ளாத பதார்த்தங்களை எடுத்துக் கொள்ளுவீர்களானல் பலவிதமான ரோகங்களால் தொல்லைப்படுவீர்கள். எந்த நேரமும் வயிற்றில் பலவிதமான கோளாறுகளிருந்து கொண்டேயிருக்கும். மருந்து வகைகளும் இந்தவாரத்தில் அதிகம் தொழில் செய்யாது. புதன்கிழமையில் கொடுக்கல் வாங்கல் செய்தல் உத்தமம்.

**கும்பம்**

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) செவ்வாய் உங்கள் ஜன்ம இராசியில் சஞ்சரிப்பதால் எதிரிகளுடைய பலவிதமான தொல்லைகள் வந்துசேரும். நீங்கள் எவ்வளவு ஒதுங்கி நடந்துகொண்டாலும் உங்களைத் தொல்லைக்குள் மாட்டிவிடுவார்கள். எந்தக் காரியத்திலும் மற்றவர்களுடைய தலையீட்டினுல் கஷ்டப்படுவீர்கள். மிகவும் கஷ்டப்பட்டு சகிக்கவேண்டிய சந்தர்பங்களும் சூழ்நிலைகளும் ஏற்படும். செவ்வாய்க்கிழமை உங்களுக்கு மிகவும் சோதனையானகாலம். வியாழக்கிழமை உங்களுக்கு அநுகூலமான காலம்.

**மீனம்**

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்தவாரம் அதிக நெருக்கடிகள் ஏற்படாது. பொருள் நிலைமைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து அபிவிருத்திகள் அதிகமில்லாவிட்டாலும் பொருள் நெருக்கடிகள் ஏற்படாது. கைவசமிருக்கும் பணத்தைக் கைவிடாமல் வருகிற பணத்தில் வரவு செலவு

(3-ம் பக்கம் பார்க்க)





தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்

# புராதன இலங்கையும் தமிழரும்

— வித்துவான் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல். —

கீழ்மாகாணத்திலுள்ள பாம்பரகடவல என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்ட 2150 ஆண்டுகளுக்கு முற்பட்ட குகைக் கல்வெட்டு ஒன்றில் நாகர் குலப் போர்வீரர் ஒருவரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இதே காலத்துக்குரிய இன்னொரு கல் சாசனத்தில் யக்கரைப் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. யக்கர் இலங்கையில் தான் வசித்துவந்தார்கள் என்று இராமாயணமே கூறுகின்றது. இராமாயணகாலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த மக்களை பொதுப்படையாக ஆரியரும் திராவிடருமென வகைப்படுத்தலாம். ஆகவே, இராவணனும் அவனைச்சேர்ந்த யக்கரும் மற்றும் நாகர்கள் எனப்பட்டோரும் திராவிடரே அன்றி ஆரியர் அல்லர் என்பது ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்தாகிறது. சிங்களவரை ஆரிய இனத்தவர் எனக்கூறிக் கொள்வதில் பெருமைப்படும் மகாவம்சம் என்ற சிங்களர் வரலாற்று நூல், புராதன இலங்கை கண்ட யக்கரும் நாகரும் மனித கணத்தைச் சேராத 'அமானுஸர்' எனக் குறிப்பிட்டிருப்பது இதனால் தான்.

நாகர்கள் வட இலங்கையிலும் வடமேற்கு இலங்கையிலுமிருந்து அரசாண்டதையும் யக்கர் அதே காலத்தில் இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதிகளை தம்வசப் படுத்தியிருந்ததையும் புத்தரின் இலங்கை வருகை பற்றிய மகாவம்சத்தின் கட்டுக் கதைகள் சுட்டிக் காண்பிக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டை நாகதீபம் என்று மகாவம்சம் குறிப்பிட்டிருப்பதும் இக்காலத்தில் குடாநாட்டுக்கு அணித்தாக மேற்குத் திசையிலுள்ள ஒரு சிறிய தீவை சிங்களவர் அப்பெயர் கொண்டு அழைப்பதும் இங்கு கவனித்தற்குரியது. இத்தீவையே தமிழர் நயினாதீவு என்பர். சங்க இலக்கியத்திலும் மணிமேகலை என்ற காவியநூலிலும் ஈழத்து நாகர்களைப் பற்றியும் தென்னிந்திய நாகர்களைப் பற்றியும் நிறையக் கூறப்பட்டிருக்கிறது. யாவா தேசத்தில் நடைபெற்றுவந்த நாக இராச்சியம் பற்றியும் மணிமேகலையில் சில குறிப்புகள் உள்ளன.

பண்டைநாளில் நாகர் இந்தியாவில் அநேகம் பகுதிகளில் வசித்திருக்கின்றனர், புத்தர் காலத்திற்கு முன்னரும் அதற்குப் பின்பும் அவர்கள் பல இராச்சியங்களைக் கொண்டிருந்தார்கள். இக்காலங்களிலெல்லாம் தமிழகத்திலும் இலங்கையிலும் வசித்து வந்த நாக இனத்தவரின் தாய்மொழி தமிழாகவே இருந்திருக்கக்கூடும். அவர்கள் தமிழ் இனத்தவரின் ஒரு பகுதியினராகவே கருதப்பட்டார்கள். நாக புலவர்கள் தமிழ் சங்கங்களில் இருந்து தமிழ் வளர்த்திருக்கிறார்கள். 'நாகனார்' என்ற பெயருடன் முப்பது புலவர்கள் மட்டில் இருந்திருக்கிறார்கள். முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் முதல் சங்க காலத்தில் புகழ்பெற்ற புலவராக இருந்தார்.

நாகபட்டினம், நாகர்கோவில் போன்ற இடப்பெயர்களும், நாகன், நாகமணி, நாகமுத்து, நாகம்மாள் ஆகிய பெயர்களும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் முற்காலத்தில் வசித்த நாகர்களை நமக்கு நினைவூட்டுவதாயுள்ளன. நாகதம்பிரான் வழிபாடு நாகம்மாள் வழிபாடு போன்றனவும் இந்தெய்வங்களின் பெயரால் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் எழுந்துள்ள ஆலயங்களும் இப்பகுதிகளில் நாகர்கள் பெற்றிருந்த செல்வாக்குச் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

புராதன காலத்தமிழரும் யக்கரும் நாகரும் பொதுவானதொரு பழைய இனத்தொகுதியை—ஒரே மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்திருக்கலாம்.

தென்னிந்தியாவிலுள்ள தமிழர் நாடுகளில் தமிழர் அல்லாத வேறு எந்த இனத்தினராவது எக்காலத்திலேனும் வசித்தார்கள் என்று கூறுவதற்கு இதுவரை நாளில் யாதொரு அத்தாட்சியும் கிடைத்திலது. 'மாதவம் சேர் தென் திசை', தென்னாடுடைய சிவன்', 'தென் மதுரை','தென்னிலங்கை', 'தென்னன்', 'கன்னித் தென் கரை', தென்மொழி-ஆகியன போன்ற தமிழகத்தைப் பற்றிய சிறப்பு மொழிகள் யாவும் நினைவு கடந்த காலம் முதலாக இலங்கை உட்பட இந்தியாவின் தென்பிரதேசமே புராதன காலத்தமிழரின் தொடர்புடை நாடாக இருந்ததென்ற உண்மையை ஆதாரப்படுத்துகின்றன.

உலகின் தலையாய இரு பெரும் மக்கள் தொகுதியை கருவாகக்கொண்டு தோன்றியவர்களே ஆரியரும் திராவிடரும். ஆரியர், முக்கியமாக வட பகுதியிலும் மேற்குப்பகுதியிலும் வசித்தார்கள். திராவிடர் தெற்கிலும் கிழக்கிலும் வசித்தார்கள். இது பற்றியே, ஆரியரை உயர்நிலைப் பட்டோர் எனவும் தேவர்கள் எனவும் நாகரையும் யக்கரையும் கீழ் உலகத்தவரென்றும் கீழ்நிலைப் பட்டவரென்றும் புராணங்கள் கூறுவதாயிருக்கலாம். இந்தியாவின் வடபகுதியில் வசித்த ஆரியருக்கு தென் இந்தியப்பிரதேசம் தாழ்ந்த பூமியாகத் தோன்றியிருப்பது இயல்பே.

பெரும்புலமை படைத்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர் என்பார் நாககன்னி ஒருத்தியை மணம்புரிந்த தமிழ்மன்னனைப்பற்றிக் கூறுமிடத்து 'அம்மன்னன், பூமியிலிருந்த ஒரு பிலவு வழியாகப்பாதாள உலகம் சென்று நாககன்னியை மணந்து கொண்டான்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மகாவம்சமும், ஏனைய வரலாற்றுநூல்களும், வெளிநாட்டு யாத்திரிகர்களின் அவ்வப்போதைய சுருக்கக் குறிப்புகளும் வேடர்களே இலங்கையின் தொல்குடிமக்கள் எனத் தெரிவிக்கின்றன. யக்க அரசகுமாரியான குவேனி என்பாளிடத்து விஜயனுக்குப் பிறந்த புதல்வனதும் புதல்வியினதும் பிற்சந்ததியினரே வேடர்எனப்படுவர் என்பதாக மகாவம்சம் கூறுகிறது. விஜயன் காலத்திலும் இலங்கையில் வேடர் வசித்தமையை மகாவம்சம் ஏற்றுக் கொள்வதற்கு இதுதவிர வேறு வகை இல்லாது போயிருக்கலாம், வேடர், உலகின் பலநாடுகளில் தனித்தொதுங்கிய பகுதிகளில் இன்றைக்கும் நாகரிகமடையாதவர்களாய் வாழும் அந்தந்தப்பகுதி பூர்வ குடிமக்கள் கூட்டத்தைச்சேர்ந்தவர்களாக கணிக்கப்பெற்று வாழ்ந்துவருகின்றனர். தென்னிந்திய மலைஜாதியினரான இருளர், குறும்பர் எனப்பட்டோரை இவர்களுக்கு உதாரணமாகக் கூறலாம்.

யக்கரையும், நாகரையும் வேடரையும் தவிர தமிழரும் விஜயன் வருகைக்கு முன்னரோ அல்லது அவனுக்குப் பிந்தியோ இலங்கையில் வசித்திருப்பார்களா என்ற கேள்வி எழுகிறது. இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் மத்தியில் இருந்த சொற்பதூரமும், கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்திய ஓராயிரம் ஆண்டுகாலத்தில் கடல்வாணிபத் துறையில் தமிழர் பெற்றிருந்த தேர்ச்சியும் திறமையும் வெளிநாடுகளுக்கு எட்டியிருந்ததும்விஜயன் இலங்கைக்கு வருமுன்னமே தமிழர் இலங்கையில் வசித்திருக்கக் கூடுமென்ற கூற்றை ஆதாரப் படுத்துவதாயுள்ளன. தமிழ் நாடு இவ்வாறு இலங்கைக்கு மிக அண்மையிலிருந்ததைத் தெரிந்து கொள்ளும் அறிவு மகாவம்ச வரலாற்றைத் தொகுத்தோருக்கு இருந்ததென்பதுமகாவம்சத்தில் அங்கங்கு "மறுகரை", "அக்கரை", "சமீபகரை" என்று தமிழ்நாட்டைக் குறிப்பிடும் சொற்களிலிருந்து தெரிகிறது.

இரண்டாயிரத்து நானூற்றி அறுபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக அதாவது கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டில், ஆரியர் இலங்கை வந்து சேர்ந்திருக்கக்கூடுமென அனுமானிக்கப்படுகிறது. அது எப்படியிருப்பினும் தமக்கென்று சொந்த இராச்சியமும் மேற்கு கிழக்கு நாடுகளுடன் செழிப்பான வாணிபமும் கொண்டிருந்த தமிழர் இலங்கையில் நிலைத்திருந்திருப்பரென்பதில் சந்தேகத்துக்கிடமில்லை இவ்வுண்மையை இலங்கையின் சரித்திரம் எழுதிய எல்லா சரித்திர ஆசிரியர்களும் சுட்டிக் காண்பித்திருக்கின்றனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சமாளித்தீர்களானால் சுகப்படுவீர்கள் தேக சுகத்தைப் பொறுத்தவரையில் இந்தவாரம் சுமாராக இருக்கும். பித்த சம்பந்தமான கோளாறுகள் இடையிடையே தலைகாட்டினால் சுகக்குறைவு அதிகம் ஏற்படாது.

## கல்வியின் நோக்கம்

— க. சச்சிதானந்தன் —

ஊற்றெடுத்து உச்சிமலை ஓடிவரும் ஆறு
உடைத்தெறியும் பாலங்களை வீடுகளை யெல்லாம்
நாற்றுவயற் கழனிகளை அள்ளிமரம் வீழ்த்தி
நாசமுறு காரியங்கள் புரியுமதன் வேகம்.

கட்டியணை தொடுத்துவிட்டுக் கால்வாய்கள் கீறிக்
கனத்த பெரும் எந்திரத்துச் சில்லுருள விட்டால்
விட்டொளிரும் மின்சார விசைகொடுக்கும் வயல்கள்
விளைந்து கதிர் குலுங்கிடவே வேண்டியநீரளிக்கும்.

உள்ளமதில் ஊற்றெடுக்கும் சக்தியெனும் வெள்ளம்
ஊறுவினைக் காதபடி உயர்ந்த கலைகளிலே
மெள்ளவதைப் பாய்ச்சியொரு வழிப்படுத்தல் தானே
மேலோர்கள் கண்டதொரு கல்வியதன் நோக்கம்.

பரந்துகதி ரோனொளியிற் கலந்திருக்கும் சூடு
பளிங்காடி பாய்ந்துவிடிற் பற்றிவிடும் நெருப்பாய்
கரந்திருக்கும் மனிதஉளப் பரந்தபெருஞ் சக்தி
கலைகளிலே ஒருமித்தல் கல்வியதன் நோக்கம்.

உள்ளிருக்கும் உடற்சக்தி கைவண்ண மாகி
உயர்ந்த பல படைப்புகளை உண்டாக்க வேண்டும்
உள்ளமுறு மனவளர்ச்சி உடல்வளர்ச்சி யோடு
ஒருமித்து இணைவதுவே கல்வியதன் நோக்கம்.

அந்தந்த இடங்களிலே அவைக்குரிய சேர்தல்
அழகென்று அனுபவித்தல் கல்வியதன் நோக்கம்
அந்திதரு செவ்வானம் அலைகடலில் நீலம்
அழகாகச் சுவைப்பதுவும் கல்வியதன் நோக்கம்.

காவியங்கள் கற்பனைகள் கவியமுதம் பொங்கும்
கண்கவரும் சிற்பங்கள் நாடகங்க ளோடு
ஓவியங்கள் வண்ணங்கள் ஒப்பனைக் கோலங்கள்
உவகையொடுசுவைப்பதுவும் கல்வியதன் நோக்கம்

மறைந்துள்ள பரம்பொருளில் மக்களொரு தோற்றம்
மாறுத இப்பொருளில் மனதைவைக்க வேண்டும்
நிறைந்துள்ள நிர்மலமாம் பரமாத்மா தன்னில்
நேராகச் சீவாத்மா கலப்பதுவே கல்வி.

# இலக்கியத்தில் 'அன்புக் களவு'

— ப. சந்திரசேகரம் —

மணியில் ஒலியை எடுத்துக்கொள்ளுவோம். மணியிலிருந்து ஒலியை வேறாகப் பிரித்தெடுக்கவியலாது. அதுபோல இலக்கியத்திற் களவென்பது இலக்கியத்தில் அகப்பொருளில் கூறப்படும் களவுப் பொருளைக்குறிப்பதாகும். இது பிரிக்கமுடியாமல் தன்னோடு ஒற்றுமையுடைய தற்கிழமைப் பொருளுடைத்தாகும்.

இலக்கியத்திற் களவு என்றவுடன் இலக்கியத்திலுள்ள ஒரு பகுதியை எவனோ திருடனொருவன் களவாடியிருக்கலாமென்று நீங்கள் எண்ணியிருக்கலாம், அது எவ்விதமிருப்பினும் ஒரு பொருளை இரு திருடர்கள் களவாடுவதைப் பற்றி விளக்கிக்கூறும் ஒரு பகுதியாகும். திருடர்கள் எதைக் களவாடினார்களென்று கூறுமுன் களவு என்றால் என்ன என்று ஆராய்வோம்.

இக்களவு பஞ்சமா பாதகங்களிலொன்றாகும். இப்பஞ்சமா பாதகங்களை எல்லாச் சமயத்தோரும் வெறுக்கின்றனர். அரசாங்கமும் இதற்காகப் பல சட்டதிட்டங்களை வகுத்து மக்கள் இதினின்று மீட்சி பெறுவதற்காக வழிசெய்து வருகின்றது. தனக்கு உரிமையில்லாத பிறனொருவனுடைய பொருளை—அவனது உடன்பாடில்லாமல் — அவனுக்குத் தெரியாமல் அபகரித்துக் கொள்வது களவாகும். இக்களவையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும் கள்ளாமை என்னும் பகுதியில்,

"எள்ளாமை வேண்டுவான்
என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கத் தன்
நெஞ்சு" (திருக்குறள் 281)

என்று கூறியுள்ளார். அதாவது முத்தியை விரும்புகின்றவன் களவை நினையாமல் தன் மனத்தைக் காக்கவேண்டும் என்பதாம். எனவே களவு செய்தலைப்பற்றி நினைப்பதே மோட்சத்தை யடையமுடியாதபடியான பெரும் பாவமாகும் என்பது அறியக்கிடக்கிறது. ஆனாற் பொய்மையும் நன்மை பயக்குமிடத்துக் கூறலாமென்று கூறிய வள்ளுவப் பெருந்தகை களவையும்நன்மை பயக்குமிடத்துச் செய்யலாமென்று கூறவில்லை. எனினும் பொய்யும் களவுமொக்குமெனவுங் கூறுகின்றார். சில சந்தர்ப்பங்களில் இக் களவு நன்மை பயக்கக்கூடியதாகவும் மாறுவதுண்டு.

அது எவ்விதமான களவாகவிருக்குமென்பதைப் பார்ப்போம்.

"ஒரு வீட்டிலே தந்தையோடு மகன் கோபித்துக் கொண்டு நஞ்சுண்டிறப்பேனென்னுமுள்ளத்தோடு, நஞ்செடுத்துவைத்துக் கொண்டு விலகுவாரெவருமில்லாத போதுண்டிறப்பேனென்று நின்றவிடத்து, அவனிலொருவனுடை நண்பனொருவன் அதனைக்கண்டு, இவனிதனையுண்டிறவாமலிருப்பதற்காக, அவனுக்குத் தெரியாமலெடுத்துக்கொண்டு போயூற்றிவிட்டான். அதனாலவனும் நஞ்சுண்டிறவாமலிறப்பு நீங்கினான்"

நண்பனவன் அந்நஞ்சைக் களவாடியபடியால் அவனதுயிர் தப்பிக்கொண்டது. இது போன்றகளவே நன்மை பயக்கும் களவாகும்.

இலக்கியத்தில் வருமிக்கள்வு யாதோவெனின் பருவம் நிறைந்த ஆண்மகனொருவன் பருவம் நிறைந்த பெண்மகளொருத்தியைக்காணும்போது அவர்கட்குள்ள நிறமுடல்,அங்க வழகு, தோற்றமிவைகளால் ஒவ்வொருவர்க்கும் உள்ளத்தேயோரன்பும், புறத்தே நாணமும் தோன்றும். இவர்களுள்ளத்தே நிகழுமன்பை யொருவர்க்கொருவர் வெளியிடமாட்டாமையாலகத்தே யுறுத்திக்கொண்டிருக்கும்—இதுவே காதலுணர்வாகும்.

இதனாலே தன்னுள்ளத்தேயுள்ள ஆண்மகனுடைய பொருட்களைக் காணுவதிலும் அவற்றிலொன்றை வைத்திருப்பதிலும் பெண்மகள் அன்பும் விருப்பமுமுடையாளாகி நிற்பாள். இதேபோன்று ஆண்மகனும் பெண்மகளுடையபொருட்களிலன்பும், விருப்பமும் வைத்திருப்பான். இது மாத்திரமல்ல. ஒருவர் மீதுள்ள இவ்வன்பானது அவர் வீட்டிலுள்ள பறவைகள், விலங்குகள், அவர்தம் உடன்பிறந்தார் போன்றோர் உயிர்கள்மீதும், உயிரற்ற உபகரணங்கள்மீதுங் காணும்போதெல்லாம் படர்ந்துசெல்லும். இது அளவு கடந்தஅன்பினிமித்தம் நடைபெறுவதாகும்.

தங்களது அளவுகடந்த அன்பைத் தெரிவிக்குமுகமாகப் பண்டைக் காலத்திற் தலைவன் தலைவிக்குத் தழைகள் வழங்குவதாகவும், அத்தழைகளைத் தலைவி தலைவனெனவெண்ணி மிக்கவன்போடு மார்புடனணைத்து வைத்திருப்பாளெனவு மிலக்கியங்கள் கூறுகின்றன.

"அன்னாய் வாழிவேண்
டன்னை யென்னை
தானு மலைந்தானெமக்குந்
தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
என்ன மரங்கொலவர்சார
லவ்வே"—ஐங். 201

என்ற இப்பாடலக்காலத்திற் தலைவன் தலைவிக்கு அன்புத் தழை வழங்கியமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இத்தலைவன் தலைவியர் இக்காலத்திற் காதலன் காதலியென வழங்கப்படுகின்றனர். அக்கா

(5-ம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி மீ 11உ (23-2-64)


## அரசியலும் ஒழுக்கமும்

பிறன் மனைவியை இச்சித்தான் ஒருவன். அவனும் அவனது அரசும் அழிந்தது. இது இராமாயணம்.

ஒரு பெண்ணை மானபங்கப் படுத்தினான் மற்றொருவன். அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் நாசமாயினர். இது மகாபாரதம்.

இராமாயணமும் மகாபாரதமும் பாரதத்தின் பண்பாட்டுக்கு இரு கண்கள் போன்றன. மிகப் புராதனமான இவ்விரு இதிகாசங்களையும் இன்றும் கூட கதா காலட்சேபம், நாடகம், சினிமா, தெருக்கூத்து முதலிய பல பல விதங்களிலும் லட்சக்கணக்கான மக்கள் கண்டும் கேட்டும் இன்புற்று வருவதைப் பார்க்கின்றோம்.

கதை எவ்வளவு பழையதாயினும், நமக்கு சலிப்புத்தட்டுவதில்லை. திரும்பத்திரும்பப்பார்க்கின்றோம். கேட்கின்றோம். திகட்டுவதில்லை. ஏன்? நம் பெண்களின் புனிதத்தைக் காத்துமதிக்கவேண்டுமென்று அவற்றிலுள்ள உயிர் போன்ற மேலான படிப்பினைதான்.

ஆனால் எவ்வளவுமுறை படித்தாலும், கேட்டாலும், பார்த்தாலும் ஆணாகப்பிறந்தவர்களில் பலருக்கும் இந்தப் படிப்பினை மனதில் வேரூன்றுவதில்லை. பெண்மையை அவமதிக்கிறார்கள். அதனால் மானமிழந்து அவர்களது வாழ்க்கையே குட்டிச்சுவராவதை இன்றும் பார்க்கின்றோம்.

பிரிட்டனிலே சமீபத்தில் திறமையான ஒரு பிரதமமந்திரியும், யுத்தமந்திரியும் தங்கள் பதவிகளை இழக்க நேர்ந்தது. மூலகாரணம் பெண் விஷயம்தான். சமூகத்தில் மிகப்பிரபலமாக இருந்த ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தியாவிலே கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த திறமை மிக்க ஒருமந்திரியும் பெண்காரணமாகவே தமது பதவியை இப்போது விட்டுவிடநேர்ந்துள்ளதாம்.

இங்கு இலங்கையிலும் பார்லிமெண்ட்மெம்பர்களின் விடுதியான 'சிராவஸ்தி'யிலே பல ஒழுக்கக் கேடுகள் நடந்துள்ளதாக, சென்றவாரம் அம்பலமாயிற்று. சபைத் தலைவர் இப்போது இதுபற்றி விசாரித்துவருவதாகத் தெரிகிறது. முறை தவறி நடந்த எம். பி. க்கள் யாராயினும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

கற்பு பெண்களுக்கு அவசியமென்று பொதுவாக வற்புறுத்தப்படுகின்றது. ஆனால் இதே கற்பு ஆண்களுக்கும் மிக அவசியமென்பதை அமரகவி பாரதியார் வற்புறுத்தினார். "கற்பு நிலையென்று சொல்லவந்தார், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்; வற்புறுத்திப் பெண்ணைக்கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்" என்று பெண்கள் விடுதலைக் கும்மியிலே முழங்குகின்றார்.

அதிலும் ஜனநாயகத்திலே மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களும், அமைச்சர்களும், அரசாங்க பதவிகள் வகிப்பவர்களும் தங்கள் கற்பைக் காத்துக்கொள்வதில் மிகமிகக்கவனமாக இருக்கவேண்டும். பிரிட்டனிலும், இந்தியாவிலும், இலங்கையிலும் நடந்துள்ள பல சம்பவங்கள் இதை வற்புறுத்துவதாகவுள்ளன. இன்றேல் ஜனநாயகமே சீர்கெட்டு மக்களுக்குப் பெரும் சங்கடங்கள் ஏற்பட்டுவிடும்.

கற்புநிலை தவறிவிட்ட ஆண்களில் பலர் சமூகத்திலே தப்பிவிடுகிறார்கள். ஆனால் ஒருபெண் சற்றே தவறிவிட்டால், சமூகத்திலே மட்டுமன்றி உலகிலேயும் வாழ அவளுக்கு இடமில்லாமற் போய்விடுகின்றது. ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கு மற்றொன்றுமாக இருப்பதைப் பார்க்கின்றோம்.

எப்படியும் இன்று சமூகத்திலும் நாட்டிலும் இருக்கும் பல பல சீர்கேடுகளையும் பற்றி ஆழ்ந்து விசாரணை நடத்தினால், அதற்கு அடிப்படையிலே, அநேகமாக இவ்விதமான ஒழுக்கக்கேடுகளே வித்தாக இருப்பதைப் பார்க்கலாம். நாடும் வீடும் சிறப்புற்றோங்க வேண்டுமாயின் இவ்வித ஒழுக்கக்கேடுகளை அறவே நீக்க தீவிரநடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கு மனிதரின் மனது திருந்தி சுத்தமாக வேண்டும். தெய்வ அருளால்தான் இது முடியக்கூடியதென்பதை இராமாயணமும் மகாபாரதமும் நமக்கு அறிவுறுத்துகின்றன. அவை இரண்டும் வெறும் பாட்டி கதைகளல்ல நம் அரசியலைப் பரிசுத்தமாக்க வழிகாட்டும் பெரிய முற்போக்கு இலக்கியங்களாகும்.

அணுசக்தியும் பெண்மணியும்

# அணுவைப் பிளப்பதில் வெற்றி கண்ட விஞ்ஞானி மெயிட்ரன்

## அணுகுண்டு தயாரிப்பதை ஆட்சேபித்து வெளியேறினர்

அணுவைப் பிளப்பதில் ஒத்துழைத்து வெற்றி கண்டு அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தப் பாடுபட்டவரும், பௌதிகத் துறையில் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவருமான மெயிட்னர் என்ற பெண் விஞ்ஞானி அணுகுண்டு தயாரிப்பதிலும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் கண்டிப்பாக உதவ முடியாது என்று மறுத்துவிட்டார்.

உலகப் பிரசித்திபெற்ற பௌதிக நிபுணர் திருமதி லிஸே மெயிட்னர் தமது 85-வது பிறந்த தினத்தை சில மாதங்கள் முன்பாகத்தான் கொண்டாடினார். அணுவை பிளப்பது சம்பந்தமாக இவர் ஆட்டோ ஹான் என்ற ஜெர்மன் ரசாயன நிபுணருடன் ஆராய்ச்சிகள் செய்து புது கண்டு பிடிப்புகளை வெளியிட்டவர்.

இவ்வளவு உலகப்புகழ்பெற்றும் மெயிட்னர் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார். இவர் வியன்னாவில் பிறந்தவர். இவருடன் கூடப் பிறந்தவர்கள் 6 பேர். இவர் தகப்பனார் ஒரு வக்கீல். இவர் விஞ்ஞானத்தில் ஆர்வம் காட்டியபோது பெண்கள் யாரும் பௌதிகத் துறையில் ஈடுபட முன்வரவில்லை. 1905-ல் அவர் டாக்டர் பட்டம் பெற்றது அக்காலத்தில் பெரும் அதிசயமாகக் கருதப்பட்டது. வியன்னா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணிகளில் இரண்டாமவர் மெயிட்னர்.

இவர் பௌதிக நிபுணர் ஸ்டெபர் மேயர், என்பவருடன் சேர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். மேயர், கதிரியக்க ஆராய்ச்சிகளில் அதிக நாட்டம் கொண்டவர். 1907-ல் மெயிட்னர் பெர்லின் வந்து மாக்ஸ் பிளாங்கின் விஞ்ஞானப் பிரசங்கங்களை கேட்டு வந்தார். டாக்டர் ஆட்டோ ஹானுக்கு மெயிட்னரை அறிமுகப்படுத்தியது மாக்ஸ் பிளாங்க்தான். ஆனால் பெர்லின் ரசாயனக் கழகத்தலைவர் பேராசிரியர் எமில் பிஷர் ஒரு ஸ்திரீயை ஆராய்ச்சிசாலையில் அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டார். டாக்டர் ஹான் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதின் பேரில் மெயிட்னர் ஒரு தனி அறையில் ஆராய்ச்சிகளை நடத்த பிஷர் அனுமதித்தார். 1912-ல் பிளாங்க் மெயிட்னரை தன் உதவியாளராக நியமித்துக்கொண்டார். பெர்லினிலுள்ள கெய்ஸர் வில்ஹெம் ரசாயனக் கழகத்தின் பொறுப்பை ஹான் ஏற்றபோது மெயிட்னர் அவருடன் சேர்ந்து கொண்டார். 1922-ல் மெயிட்னர் பௌதிகப் பேராசிரியையானார். பெர்லின் பல்கலைக்கழகத்தில் இப்பதவியை வகித்த முதல் ஸ்திரீ இவர்தான்.

1938-ல் இவர் ஜெர்மனியை விட்டே வெளியேற நேரிட்டது. இவர் முதலில் கோபன்ஹேகன் சென்றார். அங்கு பிரபல பௌதிக நிபுணர் நீல் போரை சந்தித்தார். இவர் ஸ்டாக் ஹோமில் குடியேறினார். நோபல் பௌதிகக் கழகத்தில் சிலகாலம் சேவை செய்த பிறகு ஸ்டாக் ஹோம் டெக்னலஜிகல் இன்ஸ்டிடியூட்டில் பேராசிரியராக சேவை செய்தார். இவர் பௌதிகத் துறைத் தலைவராக விளங்கினார். தானும் ஆட்டோ ஹானும் அணுவைப் பிளக்கும் ஆராய்ச்சியில் வெற்றி பெற்றதை இவர் தனது அமெரிக்க சகாக்களுக்குத் தந்தி மூலம் தெரிவித்தார்.

# வானொலியில் பெண்கள் விருப்பம்

— வி. என். பி. —

இந்தத் தலைப்பு சற்றே அசடாகத்தோன்றுகிறது, அல்லவா? எந்தப் பெண்தான் வானொலியை விரும்பமாட்டாள்? கியூடெக்ஸ், ஹான்ட் பாக், லஞ்ச் சின்ரேவல் - முதலிய வற்றுடன் வானொலியும் இந்த 20½ம் நூற்றாண்டு மாதங்களோடு ஒன்றிப் பிணைந்திருக்கிறதே? மாயமானைப் பிடித்துத்தா என்று கட்டளையிட்ட சீதையைப்போல எத்தனை பெண்கள் வானொலிப் பெட்டி வாங்கித்தரும்படி தங்களுடைய ராமர்களிடம் நச்சரிக்கிறார்கள்? அடுத்த வீட்டு ராமாயி 7வால்வ்பெட்டி வைத்துவிட்டாள் என்பதைச் சகித்துக் கொள்ள முடியாமல் அண்டைவீட்டு ரங்காயி தன்னுடைய மூக்குத்தியை அடகு வைத்தல்லவா 8 வால்வ்பெட்டி வாங்கினாள்? இது, தன் மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாயிருக்க வேண்டுமென்ற சித்தாந்தம்! மழைக்குக் கூடப் பள்ளிக் கூடத்தில் ஒதுங்காத மனோன்மணிதான் வளர்த்த பசுவையும் கன்றையும் விற்றுப் போட்டல்லவா ட்ரான்ஸிஸ்டர் வாங்கி வைத்திருக்கிறாள்? ஆகையால் மேலேயுள்ள தலைப்பில் அசடு வழிகிறது, என்ன? பூக்களில் வண்டுகள் விருப்பம். மீன்களில் பூனைகள் விருப்பம் -என்பது போலிருக்கிறது! பூவையும் மீனையும் விரும்பாத வண்டையும் பூனையையும் இதுவரை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

வானொலியில் 'பெண்கள் விருப்பம்' என்று போடாமல் விட்டது எமது தவறு. அதாவது வானொலியில் - இலங்கை வானொலியில் - பெண்கள் விருப்பம் என்று ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி இருக்கிறதென்பதை நாம் தெளிவாக்கியிருக்க வேண்டும். 'பெண்கள் விருப்பம்' என்று வானொலி நிகழ்ச்சி நிரலில் போடப்பட்டிருப்பதைக் கண்டதும் மூளையில் குவிந்தெழுந்த கற்பனைகளும், குழப்பங்களும், பிரச்னைகளுமே இந்தப் பித்தலாட்டத்துக்குக் காரணம்.

பெண்கள் மனத்தை அளவிட முடியாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். அப்படியிருக்க, இலங்கை வானொலியிலுள்ள மனதத்துவஆராய்ச்சி நிபுணர்கள் பெண்கள் விரும்புவது என்னஎன்பதைக் கண்டுபிடித்துவிட்டமை பாராட்டுதற்குரிய சாதனை. அது நிற்க,

இரண்டாவது மகாயுத்தத்துக்குப் பின் உலகத்தில் ஆண்களை விட பெண்களே அதிகம் என்று புள்ளி விபர நிபுணர் தெரிவித்திருக்கிறார். ஆகையால் ஒரு நாளைக்கு 8,10 மணித்தியாலம் ஒலிபரப்பும் இலங்கை வானொலி பெண்களுக்கு ஆக 15 நிமிடங்களே ஒதுக்கிவைத்திருப்பது முறையா? இது அடுக்குமா? ஐம்பதுக்கு ஐம்பதாவது கொடுக்க வேண்டாமா? இந்த அநீதியை எதிர்த்து ஊரிலுள்ள மாதர் சங்கமெல்லாம் போருக்கு ஆயத்தமாக வேண்டாமா? ஒன்றுமில்லாவிட்டாலும், அளவுக்கு மிஞ்சித்தின்று கொழுத்த ஒருமாது, தன் இனத்தின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக கூப்பனை விதானையிடம் ஒப்படைத்து விட்டு, உண்ணாவிரதம் இருக்கப்படாதா? இதென்ன அநியாயம், அக்கா!

பெண்களை திருப்திப் படுத்துவது அசாத்தியம் என்று மறைகள் கூறுகின்றன. 15 நிமிடத்துக்குள் எப்படி பெண்ணினம் முழுவதையும் திருப்தி செய்வது? மணமான பெண்கள், மணமாகாத பெண்கள், நாரிகள், மோகிகள், பாட்டிகள், பூட்டிகள்—இப்படி பெண்களில் எத்தனை விதமுண்டு. இவர்கள் எல்லோரையும் ஓர் அற்ப 15 நிமிட நிகழ்ச்சியில் எப்படி திருப்தி செய்வது?

இந்தப் 'பெண்கள் விருப்பம்' என்ற நிகழ்ச்சியைவெறும் ஆண் மகனாகிய நான் கேட்டதேயில்லை. கேட்கத் துணியவில்லை. தமிழ்ப் பண்பாட்டில் ஊறிக்கிடக்கும் என் உள்ளம் பெண்கள் பகுதிக்குள் நுழையலாமா? அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை அறியப் புகுவது அறியாமையல்லவா? ஆனபடியால் கேட்கவில்லை. ஆனால் ஊகித்தேன். இசைத்தட்டு சங்கீதமாய்த்தானிருக்க வேண்டும் கடன்பட்டுப் போயிருக்கும் அரசாங்கத்தில் காசில்லாமல் திண்டாடும் வானொலித் தமிழ்ப்பகுதி வேறு என்னத்தைத் தான் அளிக்க முடியும். சரி, இசைத்தட்டு சங்கீதம் என்று வைத்துக் கொண்டாலும் பெண்கள் என்னவிதமான இசைத் தட்டுகளை விரும்புகிறார்கள் என்று எப்படி அறிவது? ஆண்களுக்கு வேறு ரஸனை பெண்களுக்கு வேறு ரஸனை என்று இருக்கிறதா? ஆண்கள் தேன் என்று நினைப்பதை பெண்கள் பாவற்காய் என்று நினைப்பார்களா? பெண்கள் விரும்பும் ராகங்கள் எவை? அவர்கள் அரைக்கட்டையில் அலறும் பாகவதரை விரும்புகிறார்களா? (அதாவது அவர் பாட்டை) அல்லது 5¾ கட்டையில் கீச்சிடும் விதூஷிகளை விரும்புகிறார்களா? சௌந்தரராஜனா சுசீலாவா அவர்களுடையஃபேவறிட்?

இந்த இடத்தில் வேறொரு பெரும் சிக்கல் தலை தூக்குகிறது. ஆண்பால் பெண்பால் என்ற இயற்கையான கவர்ச்சி இருக்கிறதே அதன் பிரகாரம் ஆண்கள் பெண் குரலையும் பெண்கள் ஆண்குரலையும் விரும்புவதுதான் முறை என்று வைத்துக்கொள்ளலாமா? விழுகிழவர்களும் பெண்பாட்டுக் கச்சேரி என்றவுடன் விழுந்து கட்டி ஓடுவதை (கச்சேரி கேட்கத்தான்) நான் பார்த்திருக்கிறேன். அதுபோல, பெண்களும்ஆண்களின்பாட்டைத்தான் விரும்புவார்கள் என்றுஊகிப்பதில் பிழையில்லை. ஆனால் பெண்கள் மனத்தைத் தான் அளவிட முடியாதாச்சே!

இப்படி என் மூளை சுற்றிச் சுற்றி வட்டமிட்டுத் தன்னைத் தானேகுழப்பிக் கொள்ளுகிறது. 'பெண்கள்விருப்பம்'என்ற நிகழ்ச்சியைத் தொடர்ச்சியாக ஒரு வருடத்துக்குக் கேட்டபின் பெண்களின் மன நிலையைப்பற்றி ஒரு தத்துவ ஆராய்ச்சி நூல் எழுதலாமாமென்று ஓர் எண்ணம். அது கை கூடுவதற்கு இலங்கை வானொலியின் தயவும் வேண்டப்படுகிறது.

# உலகமேடை

## அடோல்ப் ஹிட்லர்

ஹிட்லர் செத்து சுமார் 20 வருடங்கள் ஆகப் போகின்றன. இருந்தும், அவரது ஆவி இன்னும் உலகத்தில் சஞ்சரித்துவருகிறது. உயிருடனிருக்கும் அவரது சகாக்கள் சிலர், ஹிட்லரின் ஆத்மா சாந்தியடைவதற்குக் குறுக்கே நின்றுவருகிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் ஹிட்லரின் சகாக்கள் சிலர் மீது மூன்று வழக்குகள் நடந்து வருகின்றன. ஹிட்லரின் ஆட்கள் மீது வழக்கு என்றால், என்ன வழக்கு என்று எவரும் கேட்கமாட்டார்கள். எல்லாம் படுகொலை சம்பந்தப்பட்டதாய்த்தான் இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

ஹிட்லரின் பெயர் உலகம் உள்ளளவும் நீடித்திருக்கும். சைத்தானின் சக்திகள் அவரிடம் அற்புதமாக வேலைசெய்தன. பல கோடிமக்களுக்கு அவர் விடுதலை அளித்திருக்கிறார். விடுதலை என்றால் இஷ்டம்போல் வாழும் சுதந்திரமல்ல. உலகிலிருந்தே விடுதலை! ஜெர்மனியில் அவர் லட்சக்கணக்கான யூதர்களை மட்டும் கொல்லவில்லை. தனது சொந்த மக்களையும் அவர் கோடிக்கணக்கில் கொன்றிருக்கிறார். தம்மைத் தீர்த்துக்கட்ட சதி செய்தவர்களை அவர் கொன்றார். யூத சமூகத்தை அடியோடு அழிக்கும்பொருட்டு பல லட்சக்கணக்கான யூதர்களைத் தீர்த்துக்கட்டினார். மகா யுத்தத்தை ஆரம்பித்து வைத்து, தனது சொந்தநாட்டு மக்கள் உட்பட, உலகின் கோடிக்கணக்கான மக்களை கொன்று குவித்தார். நிற்க:

★

### "ஜீவகாருண்யக் கொலை"

1939-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2,00,000 மனநோயாளர்களை "ஜீவகாருண்யக் கொலை"க்கு உட்படுத்தும் உத்தரவு ஒன்றில் ஹிட்லர் கைச்சாத்திட்டார். இவர்கள் அவ்வளவுபேரும் தமது சொந்தநாட்டினர். யுத்தமுயற்சிக்கு அவர்கள் இடையூறாயிருந்தார்கள் என்றுகூறி இந்தக் கொலை சாஸனத்தில் அவர் கையெழுத்திட்டார்! ஹிட்லரின் அகராதிப்படி "ஜீவகாருண்யக்கொலை" என இது வருணிக்கப்பட்டது. இந்தக் காருண்ய மகங்கரியத்தை நடத்திவைத்ததாக 4 பேர்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இதில் இருவர் தற்கொலைபுரிந்தனர். ஒருவர் மாயமாய் மறைந்துவிட்டார். ஒருவர்மட்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். உயிரோடிருக்கும் டாக்டர் ஹான்ஸ் ஹெபல்மான் என்பவர் 73,000 மனநோயாளர்களைத் தீர்த்துக்கட்டினார். இவர்களில் 3000 பேர் குழந்தைகள்.

அடுத்த வழக்கு ஹிட்லரின் மற்றும் 21 அதிகாரிகள் மீது நடைபெறுகிறது. இவர்களால் கொல்லப்பட்டவர்கள் பல லட்சம் பேர்! மற்றோர் வழக்கில் 5200 யூதர்களைக் கொன்றதாக 5 நாஜிகள் விசாரணைக் குட்படுத்தப்பட்டிருக்கிறார்கள், இந்தக் கொலைகளுக்கு பல்வேறு முறைகள் அனுஷ்டிக்கப்பட்டன. சுட்டுக்கொல்லுதல், காஸ் அறையில் அடைத்துக் கொல்லுதல், தூக்கிலிடுதல் போன்ற பல உபாயங்கள் இதில் இடம்பெற்றன.

★

### கோடிக் கணக்கில்...

சில மாதங்களுக்கு முன்பு ஹிட்லரின் மற்றோர் சகாவான ஈச்மன் என்பவர் மீது இஸ்ரேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்ற பின், அவர் தூக்கிலிடப்பட்டது அனைவருக்கும் தெரிந்திருக்கும் 60 லட்சம் யூதரைப் படுகொலை புரிந்ததாக இவர்மீ குற்றச்சாட்டு. "ஐரோப்பாவின் பயங்கரமனிதன்" என்று வருணிக்கப்பட்ட ஹிட்லரின் பொலிஸ் மந்திரி ஹிம்லர், 50 லட்சம் பேரைக் கொன்றவர் என சரித்திரத்தில் இடம்பெறுகிறார். இது போன்ற பெருமைபெற்ற இன்னும் பல சகாக்களையும் ஹிட்லர் கொண்டிருந்தார்.

இத்தனை கோடிக்கணக்கான கொலைகளும் ஹிட்லரின் பேராலேயே செய்யப்பட்டன. யுத்தத்தில் மாண்டவர்களின் தொகை இதில் அடங்கவில்லை; யுத்தத்தில் உயிர்விட்டவர்கள் இன்னும் அதிகம். ராணுவத்தினர் மட்டுமின்றி, குழந்தைகள், நோயாளர்கள், வயோதிகர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரையும் யுத்தகாலத்தில் ஜெர்மன் விமானங்கள் குண்டுவீசிக் கொன்றன. கொஞ்சமும் ஈவிரக்கமின்றி கோடிக்கணக்கான உயிர்களை சித்திரவதை மூலம் கொல்லக்கூடிய நெஞ்சழுத்தம், 20-ம் நூற்றாண்டில் ஒருவருக்கு இருந்ததென்றால் அது எவ்வளவு ஆச்சரியம்?

"20-ம் நூற்றாண்டில் காந்தியைப் போன்ற ஒரு அகிம்சாவாதி உலகில் உயிர் வாழ்ந்தார் எனக்கூறினால், வருங்கால சந்ததியினர் அதை நம்புவதே கஷ்டம்" என ஒரு பிரபல சரித்திராசிரியர் குறிப்பிட்டார். ஹிட்லர்போன்ற ஒரு இந்திரஜித்து, இராவணேஸ்வரன், நரகாசுரன், இரண்யாட்சகன் ஒருவர் 20-ம் நூற்றாண்டில் இருந்தார் என்றாலும் நம்புவது கஷ்டமே.

★

### அசாதாரண திறமை

மகா அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீஸர், நெப்போலியன், செங்கிஸ்தான் போன்ற வீரர்களின் வரிசையில் ஹிட்லரை வைத்து வீரவணக்கம் செலுத்துபவர்கள் இன்னும் உண்டு. ஆனால் மேற்கண்ட வீரர்களில் சிலர் நேர்மையான உண்மை வீரர்களாகவும் விளங்கினர். நிரபராதியான உயிர்களைப் பலிவாங்குவதில்மட்டும், அவர்கள் ஹிட்லருடன் போட்டியிட முடியவில்லை. ஹிட்லர் அசாதாரணமான திறமைசாலி. அவரிடம் அபூர்வமான சக்தி இருந்தது. ஆனால் அவ்வளவும் சைத்தானின் சக்தி. இதுதான் சரித்திராசிரியர்களின் தீர்ப்பு.

முஸோலினியின் முறைகளைப் பின்பற்றி ஹிட்லர் நாஜி கட்சியைத் தோற்றுவித்தவிதம், அவரது அற்புதமான பிரசார இயக்கம், இடியோசை, நெஞ்சுரம் ஆகியன ஜெர்மனியின் ஆட்சியைக் கைப்பற்ற அவருக்கு வாய்ப்பளித்தது. தேர்தலின் போது, ஜெர்மன் பார்லிமெண்டுக்குத் தீவைத்துவிட்டு, யூதர்களின் மீது அவர் பழி சுமத்தியதும், பார்லிமெண்ட் நடந்து கொண்டிருக்கும்போது ஒரு சில ஆயுதபாணிகளுடன் சென்று மந்திரிகளைக் கைது செய்து, அதேசபையில் தமது தலைமையில் புதியமந்திரி சபையை அறிவித்த வீரசாகஸமும் ஹிட்லரின் வாழ்க்கை வரலாற்றில் காணலாம்.

தேர்தல் மூலம் பதவிக்கு வந்தபின் நாட்டின் சர்வாதிகாரியாக மாறினார் ஹிட்லர். சகல அதிகாரங்களும் அவர் கைக்கு வந்தன. உலகமே கண்டிராத வகையில் ஜெர்மனியின்போர்ப் படைகளை அவர் பெருக்கிக் கொண்டுவந்தார். ஹிட்லரின் உத்தரவும், சட்டமும் ஒன்றுதான் என கோயரிங் பிரகடனம் செய்தார்.

இப்போதெல்லாம் அமெரிக்காவும், ரஷ்யாவும் "யார் பெரியவன்" என்றபோட்டியில் இறங்கியிருக்கின்றன அல்லவா? ஆனால் ஹிட்லர் இருந்த போது, அவரைத்தவிர - ஜெர்மனியைத் தவிர -"நான் பெரியவன்" என்று எந்த வல்லரசுமே சொன்னதில்லை. சொல்லத் தைரியமும் இல்லை. ஹிட்லரின் பெயரைக் கேட்டு எல்லாவல்லரசுகளுமே நடுங்கின.

★

### உலகம் நடுங்கியது

யுத்தத்துக்கு முன் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான், சீனா ஆகிய ஏழு வல்லரசுகள் இருந்தன. யுத்தத்திற்குப்பின் அது இரண்டு வல்லரசுகளாக (ரஷ்யா, அமெரிக்கா) வீழ்ச்சியடைந்தது. இப்போது ஆசியாவில் சீனாவும், இந்தியாவும் புதிய வல்லரசுகளாக உருவெடுத்து வருகின்றன. யுத்தத்துக்கு முன் இத்தனை வல்லரசுகள் இருந்தும், ஜெர்மனிதான் யாரும் அஞ்சக்கூடிய நாடாக விளங்கியது. "ஒரே நாடு. ஒரே தலைவன். ஒரே லட்சியம்" என்று முழங்கினர் ஜெர்மானியர். அந்த மக்களின் வீரத்துக்குப் பிரதிபலிப்பாக விளங்கினார் ஹிட்லர்.

இதிகாசக் கதைகளில்வரும் வீரசாகஸம் அவரிடம் இருந்ததுதான் பெரும் ஆச்சரியமாய் இருந்தது. அவருடைய "மெயின் கேம்ப்" என்ற புத்தகம், ஹிட்லரின் ஏழாண்டுச் சிறைவாசத்தின்போது எழுதப்பட்டது. இதில் ஜெர்மானியர், உலகையே ஆளப்பிறந்தவர்கள் என ஹிட்லர் குறிப்பிட்டிருந்தார். இதில் எழுதப்பட்டிருந்த லட்சியத்தையே பதவிக்கு வந்தபின் அவர் கடைப்பிடிக்கவும் ஆரம்பித்தார்.

ஜெர்மனியைத் "தாய் நாடு" என்று அழைத்தால் அதில் ஆண்மை இல்லை எனக்கருதி, "தந்தையர் நாடு" என்றே அவரது ஆட்சியில் அழைக்கப்பட்டது. அதுவே வீரத்துக்கு எடுத்துக்காட்டாகக்கருதப்பட்டது. எல்லா தனிப்பட்ட, பொது இடங்களிலும், வீடுகளிலும் ஹிட்லரின் படம் தெய்வத்தைப் போன்று வைக்கப்பட்டிருந்தன. ஜெர்மானியர் தங்களில் ஒருவரைச் சந்திக்கும்போதும், வெளிநாட்டினரைச் சந்திக்கும் போதும் "ஹெயில் ஹிட்லர்" (ஹிட்லர் வாழ்க) என வணக்கம் தெரிவித்துக்கொண்டனர்.

★

### இவர்தான் ஹிட்லர்

ஹிட்லர் ஆடம்பரப்பிரியரல்ல. அவரது நறுக்கு மீசை உலகெங்கும் புகழ்பெற்றது. ஹிட்லரின் தலைமுடி நெற்றியின் ஒரு பக்கமாக சரித்துச் சீவப்பட்டிருக்கும். புலால் உண்ணாமல், மதுபானம் அருந்தாமல், புகைக்காமல், பிரம்மச்சாரியாக வாழ்ந்த சக்தியுள்ள அற்புதமனிதர் அவர். ஆனால் கடுங்கோபி. எதிரிகளைத் தொலைத்துவிடுவார். இவ்விஷயத்தில் ஈவிரக்கமற்றவர். ஜெர்மனி ஒரு குடைக்கீழ் உலகத்தையே கட்டியாளவேண்டும் என்ற லட்சியம் கொண்டவர். அதற்காகவே யுத்தத்தை ஆரம்பித்தார். அவரது சிம்மகர்ஜனை எவருக்கும் அச்சத்தை உண்டாக்கும்.

ஹிட்லரின் சகாக்களும் பலவகையில் நிபுணர்களே. மிகச்சிறந்த ராஜதந்திரிகளையும், மிகச்சிறந்த ராணுவதந்திரிகளையும் மிகச்சிறந்த விஞ்ஞானிகளையும் அவர் பெற்றிருந்தார். எவரும் அஞ்சத்தக்க மிகச்சிறந்த ராணுவத்தையும் அவர் வைத்திருந்தார். நேசநாடுகள் முஸோலினியைக் கைது செய்திருந்தபோது எவருக்கும் தெரியாமல் அவரை மீட்டுக் கொண்டு சென்று அதிசயத்தை விளைவித்தார் ஹிட்லர். இந்தியாவிலிருந்து நேதாஜிபோஸ் தப்பிச் சென்றதும் அவர் உதவியினால்தான். வீரமும், அற்புத சாகஸங்களும், யுத்த தந்திரமும், கொடுங்கோன்மையும் கொண்ட ஒரு கலப்பு சிருஷ்டியாக அவர் விளங்கினார்.

நவீன உலக சரித்திரத்தில் ஹிட்லரின் பெயரைப்போல் எவருடைய பெயரும் இடம் பெற்றதில்லை. யுத்த காலத்தில் ஒவ்வொருநாளும் அவரது படங்களும், அவரது பெயரும் வெளிவராத பத்திரிகையோ, அவரைப்பற்றிக் கூறாத வானொலியோ, திரைப்படமோ, சம்பாஷணையோ எந்த நாட்டிலும் இருந்ததில்லை. இரும்பு மனிதரான ஸ்டாலினும், எவருக்கும் அஞ்சாத சர்ச்சிலும் ஹிட்லருக்கு அஞ்சியதை அனைவரும் அறிவர். உலகத்துக்கே அவர் ஒரு சிம்மசொப்பனமாக விளங்கினார்.

★

### வீழ்ந்தார்

தன்னுடைய பேச்சாலும், செய்கையாலும் உலகத்தையே நடுநடுங்கவைத்த இப்படிப்பட்ட ஒரு மனிதரையும் சரித்திரம் சிருஷ்டித்தது. பலாத்காரத்திலேயே நம்பிக்கை கொண்டிருந்த அவர் சைத்தானின் சக்தியைக் கொண்டவராய் இருந்தார். ஆனால் தெய்வத்தின் சக்தி அவரை வீழ்த்திவிட்டது.

அநேகமாக ஐரோப்பா முழுவதையும் அவர் கைப்பற்றினார். ரஷ்யாவில் மாஸ்கோ வரை - லெனின்கிராட் வரை - ஸ்டாலின்கிராட்வரை அவரது மின்வெட்டுப் படைகள் முன்னேறிச் சென்றன ஆபிரிக்காவில் சூயஸ்கால்வாய்வரை அவர் போரிட்டார். பிரான்சில் மாகினட் அணையை உடைத்து உட்புகுந்தார். இங்கிலாந்து, சின்னாபின்னமாக நொறுக்கப்பட்டது.

ஆனால் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இருந்த ஆங்கிலக் கால்வாய்தான் ஹிட்லரின் தலைவிதியை நிர்ணயித்தது. இங்கிலாந்து மீது படையெடுக்குமாறு பிறப்பித்திருந்த உத்தரவை ஹிட்லர் வாபஸ்செய்து, ரஷ்யாவைத் தாக்கினார். அங்கு பனிக்காலம் அவரை முறியடிக்கப் பெரும் காரணமாய் இருந்தது.

கோயரிங், கோயபல்ஸ், ஹிம்லர், ரிபண்ட்ராப், ரோமல் போன்ற அவரது மந்திரிகளும், ஜெனரல்களும் அவரவர் துறைகளில் காட்டிய அற்புதத் திறமையினால் இன்னும் ஞாபகத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

ஹிட்லர், யுத்தத்தின் மூலம் ஜெர்மனிக்கு அழிவைத்தேடித் தந்தார் என்பது உண்மையே; ஆனால் இந்தயுத்தத்தினால் ஏகாதிபத்திய நாடுகளின் மனம்மாறி, பலநாடுகள் விடுதலை பெறுவதற்கும் மறைமுகமாக வழி வகுத்தவர் ஹிட்லரே.

---

## இலக்கியத்தில் 'அன்புக் களவு'

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லத்தில் அன்பைத் தெரிவிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட தழைகள் இக்காலத்திற்றிருவுருவப் படங்களாகவும் மாறியிருக்கின்றன.

இக்களவு இலக்கியத்தில் அகப்பொருளென்னும் பகுதியில் அடக்கப்பட்டிருப்பதாகக் கூறினேன். இது அகப்பொருளில் கூறப்படக்காரணமென்னவெனின் அகம் என்பது உள் எனப் பொருள்படும். ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்பினராய்க் கூடும் கூட்டத்திற் பிறந்த இன்பத்தைப்பற்றி யவ்விருவரிலொருவரை யொருவர் கேட்கின் தத்தமக்குப் புலப்படக்கூறப்படாதாய் ஒவ்வொருவரும் அவ்வின்பத்தையுள்ளத்தேயுணரவே - வெளிப்படாது அகத்தே நிகழ்தலின் அகமெனப் பெயராயிற்று. உள்ளே நிகழும் இன்பத்திற்காகி இடவாகு பெயராக வந்தமை காண்க. உள்ளத்தே நிகழும் இன்பத்தைச் சார்ந்து வரும்போது அகப்பொருளெனப் பெயர்பட்டுநிற்கும். இன்பமெனினும் காமமெனினுமொக்கும்.

அகப்பொருளில் இக்களவு கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணையெனவும் ஒழுக்கமுறைப்படி பிரிக்கப்பட்டுள்ளன இதிற் கைக்கிளையென்பது ஒருதலைக்காமம். ஐந்திணையென்பது அன்புடைக்காமம். பெருந்திணையென்பது பொருந்தாக் காமமாகும்.

மேற்கூறிய களவுயாதோவெனின் தலைமகனும் தலைமகளும் (காதலனும் காதலியும்) கெடுப்போருமடுப்போருமின்றி ஒத்தவுள்ளத்தாற் புணர்வதாகும். இது தாய் தந்தையர்க்கும் மற்றோர்க்கும் தெரியாதபடியால் — பிறர்கண் காணுமற் களவாகநடப்பதினாலே களவாகின்றது. எனவே தான் இவ்வொழுக்கத்திற்குக் களவெனப்பெயராயிற்று. களவு தருமநெறியன்று எனினும் இது தீங்குதராத களவாகும். எப்படியெனின் பின் கற்பு நெறியிருந்து விளங்குதலாற் குற்றமின்றெனக் கொள்க.

இக்களவொழுக்கத்தாற் கூட்டம் நிகழ்ந்த தென்பதனைத் தலைவியின் உடலுறுப்பு, உணவுறக்கம், முதலியவைகளிலுள்ள வேறுபாடுகளாலே தோழியும் செவிலியும் சந்தேகப்பட்டுக் கண்ணாணித்துக் கண்டு கொள்வார்கள். அது முதலிவர்கட்குத் தலைவிமீது பொறுப்புணர்ச்சி மிகுதியாகும். தலைவியிக் குறியறிந்து கற்புநெறிபிறழாது களவைப் பாங்கிக்கும் (தோழி), பாங்கி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை தமையர்க்கும் முறையே வெளிப்படுத்திநிற்பர். தோழி அது முதற்தலைவன் தலைவியை மணஞ்செய்து கொள்வதற்குவேண்டிய பற்பல முயற்சிகள் செய்வாள். இப்படியாகத் தலைவியது கற்பையும் காப்பாற்றி வந்து கற்பொழுக்கத்தோடு மணம் நிகழ்ந்த பின்பே தோழி அமைதியுறுவாள்.

இதுவரை கூறியவற்றினின்று கள்வராகிய தலைவனும் தலைவியும் உள்ளமாகிய பொருளைக் களவாடிக் கற்புநெறிபிறழாது விளங்குமொழுக்கத்தினைக் கூறும் பகுதியே இலக்கியத்திற் களவெனப்படும்.

---

## உலகில் அதிபயங்கர கடல் பிராணி

ஆஸ்திரேலியாவின் குவின்ஸ்லாந்தை அடுத்த பசிபிக்கடலில் வசிக்கும் ஜெல்லிமீன் உலகிலேயே மிகப்பயங்கரமான பிராணி என்று கருதப்படுகிறது. இப்பிராணி நிறமற்றதாய் படிகம் போலுள்ளது. அதற்கு 4 ஜோடி கண்கள் உள்ளன. யானைத் துதிக்கை போன்ற அதன் கைகள் 20 அடி நீளத்துக்கு மேல் உள்ளன. இவ்வாறு 200 கைகள் உண்டாம். ஆனால் அதன் உடலின் அமைப்பு ஒரு கால்பந்து அளவில் பெட்டி வடிவினதாக இருக்கிறதாம்.

இந்த ஜெல்லி மீன் அதன் கைகளில் ஒன்றினால் ஒரு பிராணியைத் தீண்டினாலே அதன் கொடிய விஷம் பாய்ந்துவிடுகிறது. பின்னால் அப்பிராணி எவ்வகையிலும் உயிர்தப்பமுடியாதாம்.

கடலில் சுற்றித்திரியும் பயங்கரப் பிசாசு போன்ற இப்பிராணி 1940-ல் தான் முதலில் இன்னவகைப் பிராணி என்று கண்டுபிடிக்கப்பட்டது. அது முதல் 18 பேர் இதற்குப் பலியாகியுள்ளனர்.

# தொடர் கதை — யாத்திரிகன்

"நீலாம்பரி"

"மெய்தான் பாட்டா. வால்ஒன்றுதான் வித்தியாசம். தவிர, ஒற்றுமைகள் எவ்வளவோ உண்டாம். முக்கியமாக, வால்படைத்த நமது முதாதைகளிடமிருந்த பாய்ச்சல் குணம் இன்றைக்கெல்லாம் நம்மவர்களிடத்தே நூற்றுக்கு நூறு விகிதம் அப்படியே நிலைபெற்றிருக்கிறதாம்."

"ஆனல், மந்தி, மழைக்கால் இருட்டானலும் கொம்பிழக்கப் பாயமாட்டாதே. நமது அறிவாற்றலுக்கெல்லாம் அப்பாற்பட்டதாய் உலக சீவராசிகள் அனைத்தையும் கொண்டு நடத்தும் ஒரு சக்திக்கு நாம் என்றைக்கும் கீழ்ப்பட்டவர்கள் என்ற நினைவும் நிலையும் எப்பொழுது நம்மை விட்டு அகன்று போனதோ அப்பொழுது நாம் வளர்ச்சியே அடையவில்லை. குரங்கைவிட இழிந்த நிலைக்கே திரும்பியிருக்கிறோம்"

"அதென்னவோ நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். உங்களைப் போன்றவர்களின்குரலும்உலகின்ஒருபக்கத்தேகேட்கிறது. இன்னொரு பக்கத்தே அதைப்பற்றிய கவலையே இருப்பதாகத்தெரியவில்லை. அங்குள்ளவர்களின் உயிர் மூச்சு அறிவாற்றல் அத்தனையும் வேகப்பாய்ச்சல் ஆகிவருகிறது. அவர்கள் தம்மிரு கால்களையும் சீவிஎடுத்து வாலாக ஒட்டிக்கொண்டு விட்டாற்போல நடை உணர்வேமறந்து ஒரே பறப்பும் பாய்ச்சலுமாகி விட்டது. அதனல்தான இன்றைய யுகத்தைப் 'பாய்ச்சல் யுகம்' என்று சொல்கிருர்கள். இன்றைக்கெல்லாம்மனித அறிவாற்றல் பூமியைக் கடந்து வானமண்டலம் மட்டில் பாயத் தொடங்கியிருக்கிறதே பாட்டா" என்றேன்.

"படிப்படியாக மாறுதலடைந்து வளர்ச்சி கண்டவன், இன்றைக்கு ஒரே பாய்ச்சலில் முதற் குரங்காகி விடுவதற்கு வந்தவழி நோக்கித் திரும்பியிருக்கிருன்போலும். முதற் குரங்கு, பிறந்த மாத்திரத்தே எழுந்து சூரியனை நோக்கிப் பாய்ந்து உலகத்தை இருளில் மூழ்கடித்து அட்டகாசம் செய்தது என்று சொல்வார்கள். அப்படித்தான் முடிவில் நடக்கப்போகிறதோ!" என்று கேட்டார்.

மாங்காயைக் கொண்டுவந்து என் முன்னல் வைத்துவிட்டு 'இதையும் தோல்சீவி அரிந்து விடும். புளிஆணம் காய்ச்ச உவப்பாயிருக்கும்' என்று சொல்லிவிட்டு துருவலகின் மீது அமர்ந்து இரண்டாவது பாதித் தேங்காயைத் துருவத் தொடங்கினர் சுவாமியார். நேற்றுத்தான் மரவள்ளிக் கிழங்குப் புளிஆணம் காய்ச்சியிருந்தார். மரவள்ளிக்கிழங்கைப் பெரும்பெரும்துண்டமாக நறுக்கிப்போட்டு தேங்காய்ப பால் சொதி காய்ச்சுவதுபோல மிளகாய்; வெங்காயம், புளி, பால் எல்லாம் கலந்து அடுப்பில் கொதிக்கவைத்து அதை இறக்கியபோது வாசனை கமகமவென்று மூக்கைப் பிடுங்கியது. மரவள்ளிக்கிழங்கு நன்ருக அவியுமட்டில் விறகுகொஞ்சம் கூடுதலாகச் செலவாகும். ஆனல் விறகுக்கு இந்தக்காட்டில் பஞ்சமேது? மட்டக்களப்புப் பகுதி ஆட்களின் சமையலில் இந்த மரவள்ளிக்கிழங்கு புளி ஆணம் ஒரு விசேஷ அநுபந்தமாயிருக்குமாம். கிழங்கை அப்புறம் சாவகாசமாகச் சாப்பிடலாமென்று சொன்னபோது 'கூடாது முழுவதையும் சோற்றுக்குக் கறியாகவே சாப்பிடவேண்டும்' என்று சொல்லி அவ்வளவும் சாப்பிட்டானபின்தான் என்னை எழுந்திருக்க அனுமதித்தார்.

"நாகரிகம் வளர்ச்சி முன்னேற்றம் என்பதெல்லாமே பரிணமதத்துவம் என்ற இன்றைய கருத்துப்படி தொடங்கிய இடத்திற்கே திரும்பவும் சென்று முடிவடைவது தானும், பாட்டா. அதன்படி பார்க்கப்போனல் இன்றைய அறிவாற்றலின் போக்கு ஒழுங்குக்கிரமமாயிருக்கிறதென்றே சொல்லலாம். உலகிலுள்ள பொருள்கள், ஜீவராசிகள் தாவர சங்கமம் அனைத்துக்கும் அது அதற்கென்று ஒரு மூலக்கூறு, கரு, உயிர்நிலையம் இருக்கிறதாம். கண்ணுக்குப் புலப்படாத அணு எத்தனை சிறியதாக அது இருக்கிறதாம்—"

"தம்பி நான் ஒன்று சொல்கிறேன். எங்கே உம்மால் முடிந்தால் செய்யும் பார்ப்போம். இந்த ஆற்றுமணலில் ஒரு கைப்பிடி அள்ளித்தருகிறேன். அதை எண்ணிக்கணக்கிட்டுச் சொல்லும் பார்ப்போம்" என்று சுவாமியார் சவால்விட்ட போது நான் சற்றுமௌனமானேன். அவரே மறுபடியும் பேச்சைத் தொடர்ந்து "இதிலெல்லாம் நாம் போய் ஏன் தலையைப் போட்டுக் குழப்பிக்கொள்ளவேணும். ஒருகாலும் நடவாத காரியம். அதைவிட்டுத்தள்ளும். எங்கே அரிந்த மாங்காயைக்கொண்டு வாரும்" என்ருர்.

அப்பொழுதுதான் அரிந்து முடிந்த ஒரு மாங்காயின் துண்டங்களை அவரிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு "இது போதுமா அல்லது மற்றதையும் நறுக்கவா பாட்டா?" என்றேன்.

"இது போதாது காணும் மற்றதையும் கெதியாக சீவி அரியும்" என்று சுவாமியார் பணிக்கவே இரண்டாவது மாங்காயை எடுத்து அதன் தோலைச் சீவியபோது, 'இந்த மாங்காயின் தோலை கண்ணுக்குத் தெரியாத அளவு மெல்லிய இழையாக, ஒருமயிரிழையில் ஆயிரம் கூறு போட்ட அத்தனை சிறியதாக அரிந்தெடுத்தால்—"

"காற்றிலே ஊதிவிட்லாமோ?"

"அல்ல, அதன் நீளம் அப்பொழுது ஒரு மைல் சுல்தூரம் இருக்குமாம். அப்படியென்ருல் இந்த மாங்காய்க்கு ஒரு மைல் தூரத்திற்குப் பாய்ந்துபோகிற சக்தி இருக்கிறதென்று கொள்ளலாமாம்".

"மாங்காய் பாய்கிறதா, அதென்னடா மகன், குறளி வித்தை? எங்கள் காலத்தில் வாழ்ந்து அனுபவித்து வயதான கிழவர்மார் பிற்காலத்தவருக்கு உபயோகப் படட்டுமென்று மாங்கன்றுகள் நாட்டுவதைத்தான் கண்டிருக்கிரோம்."

"நீங்கள் ஒரு கை மண்ணை எண்ணிப் பார்க்க முடியுமா என்று கேட்கிறீர்கள். இக்காலத்து மதியூகம் ஒரு துகள் மணலை லட்சம் கூருக்கி அதை எண்ணிக் கணக்கிடச் சொல்லுகிறது பாட்டா. இதெல்லாம் குறளிவித்தை மாதிரித்தான் உங்களுக்குத் தோன்றும். மாங்காயைப் போலவே கல், மண், தாவரம் மற்றும் சீவராசிகள் அனைத்திலும் அதனதன் கருவைக் கைப்பற்றி நாம் நினைத்தமாதிரி அவற்றின் இயற்கை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியுமாம். இதெல்லாம் மந்திரமில்லே தந்திரமில்லே, பாட்டா– சொதியின் வாசனை மூக்கைப்பிடுங்குகிறதே" என்றேன்.

"மாங்காய்ப் பாலுண்டு மலை மீதிருப்போர்க்கு தேங்காய்ப்பாலேதுக்கடி" என்ருர் சுவாமியார்.

(தொடரும்)

---

# சிறுவர் பூங்கா

## வீரமாமுனிவர்

— ஏ. பத்திநாதர் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் இவர் புரிந்த தொண்டுகள்பல, இவர் சென்ற விடங்களிலெல்லாம் மக்களைக் கூட்டிப் பிரசங்கங்கள் செய்து சமய உண்மைகளை எடுத்துக் காட்டுவார். இத்தருணங்களில் பலர் அவருடன் வாது புரிவதுமுண்டு எதிரிகளைத் தம் வாக்குவன்மையால் அடக்கி விடுவார். தம்மோடு கூடி உலாவும் இளைஞர்களுக்குப்பல மொழிப்பயிற்சியும் விஞ்ஞான சாஸ்திர அறிவும் ஊட்டுவார். மக்களின் தெய்வவழிபாட்டிற்காக மதா கோவில்களைப் பல விடங்களிலும் கட்டுவித்தார். அவைகளைக் கட்டுவதற்குப் பல அரசர்களும் செல்வந்தர்களும் பணமும் நிலமும் கொடுத்துதவினர். தாம் கைவிடுங்கருமங்களை வீராவேசத்துடன் செய்து வந்ததினல் இவரைத் தமிழ்நாட்டார் தைரியநாத சுவாமிகள் என அழைத்தனர் இப்பெயரே பிற்காலத்தில் வீரமாமுனிவர் என வழங்கலாயிற்று.

ஐரோப்பியநாடுகளில் உயர்தனிச் செம்மொழிகளாகக் கருதப்படும் இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளில் அமைந்த செழுங்கலைகளைச் செவ்வனே ஓதி உணர்ந்து செல்வத்துட் செல்வமாய செவிச்செல்வம் பெற்ற இம்முனிவர் அருந்தமிழ்மொழியின் அகலங்காண விரும்பிப் பல்லாண்டு முயன்று பயின்ருர். அறம்மணக்கும் திருக்குறளின் அருஞ்சுவையையும் தமிழ்மணக்கும் சிந்தாமணிச் செழுஞ்சுவையையும் கலைமணக்கும் கம்பன் கவிச்சுவையையும் கலந்து நுகர்ந்த முனிவர் உள்ளம் பள்ளத்துட் பாயும்வெள்ளம்போல மற்றைய தமிழ்ப்பனுவல்களிலும் பரந்து படர்வதாயிற்று. தாளுண்ட நீரைத் தலையாலே தரும் தெங்கின் தகைமை வாய்ந்த இம்முனிவர் தமிழ்மொழிக்கு ஆற்றியதொண்டு அருமைவாய்ந்ததாகும்.

தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர் என்னும் தமிழகத்திற் புகழ்பெற்ற இவ்வறிஞரே தமிழ் அகராதியின் தந்தையாவர். கற்ருரேயன்றி மற்ருேரும் தமிழின் நீர்மையறிந்து இன்பமும் பயனும் எய்தவேண்டுமென்று கருதியவீரமாமுனிவர் "சதுர் அகராதி" என்னும் பெயரால் ஒருசிறந்த அகராதி செய்து உதவினர். அவ்வகராதி அளவிற்சிறியதாயினும் அருமைவாய்ந்ததென்பதில் ஐயமில்லை. தமிழ்அகராதியின் தந்தையாகிய வீரமாமுனிவர் தேம்பாவணி என்னும் நறுந்தமிழ் மலைபுனைந்து தமிழ்ணங்கைப் போற்றுவாராயினர். சூதேய நாட்டிற் பிறந்து யேசுநாதரைக் கைத்தாதையாக வளர்த்துப்புகழ் பெற்ற சூசையப்பர் என்னும் வளன்பெருமைகூறும் தேம்பாவணியில் தெய்வத் திருக்குறளின் தெள்ளியமணமும், சிந்தாமணியின் செவ்விய கற்பனைநலமும், கமலைமலிந்த கம்பன் கவிநயமும் ஆங்காங்கு அமைந்து அழகுசெய்யக்காணலாம். அரியதோர் அகராதி தொகுத்தும் அருங்காவியம் இயற்றியும் தண்டமிழ் மொழிக்கு தொண்டு செய்த வீரமாமுனிவர் நன்னூல் முதலிய பன்னூல்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து தொன்னூல்விளக்கம் என்னும் பெயரால செந்தமிழ் இலக்கணம் செய்தருளினர்.

பழம்பெருமைவாய்ந்த தமிழ் மக்கள் பண்பினை இத்தாலிய நாட்டினரும் இனிதுணருமாறு தெய்வப்புலமைக் திருவள்ளுவனர் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியிற் பெயாத்தமைத்தார். இன்னும் இவர் இயற்றிய காவலூர்க்கலம்பகம், சித்தேரியம்மானை முதலிய சிறுகாப்பியங்களும்,வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், குருபரமார்த்தன் கதை முதலியஉரைநடைநூல்களும் தமிழ்த்தாயின் திருமேனியை அழகுசெய்யக் காணலாம்.

முனிவரவர்கள் திருநெல்வேலியிலுள்ள மணற்பாடு என்னுமிடத்தில் பலகாலம் தம்முடைய மதசேவையைச்செய்து வந்தார். இவர் தமது வாழ்வையும் சுகத்தையும் பாராது தேவனுக்காய் வெயிலிலும் மழையிலும் அலைந்து திரிந்து தம் பணியை ஆற்றினர். தம் மதத்திற்கும் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் இவர் இயற்றிய தொண்டு என்றும் நினைக்கற்பாலது. 1747-ம் ஆண்டு மாசி மாதம் அம்பலக்காடு என்னுமிடத்தில் அவர் பூதவுடல் நீங்கிற்று. நம் தமிழ்நாடு என்றும் இப்பெரியாருக்குக் கடமைப் பட்டுள்ளது.

### காரணம் எதுவோ?

-சு. உமாமகேஸ்வரன்-

சேய்:

கடல்நீர் நீல நிறமான
காரணம் எதுவோ கூறம்மா
தொடுவான் சேலை தோய்வ
தனல்
தோன்றிய தோ,அந் நிற
மம்மா

துணிகள் வெளுக்குந் தொழி
லாளி
துவைத்த துணியை வெளுப்
பாகக
அணிகொன் நீலங் கரைத்த
தனல்
அந்நீர் அங்ஙனம் ஆகியதோ

வானத்தின் பேனை யால் உழு
வோர்
ஓர் ஆ மிரம்பேர் ஒன்
ருய்மை
ஊற்றிப் பேனை கழுவிய
தால்
ஓர்கால் கடல்மை ஆகியதோ

கமலக் கண்ணன் கடலி
னிலே
கண்ணைத் துயிலுவன் என்
பாயே
விமலன் நீலத் திருமேனி
நித்தம் அந்நீரில் ஊறியதோ

தாய்:
வானின் நிழலே கடல்நீரை
வண்ண நீலம் ஆக்குமலால்
தேனின் சுவையே தெள்ள
முதே
தெண்ணீருக்குந் நிற
முண்டோ.

---

# கந்தனின் ஆசை

— பி. ஏ. சிவகுமார் —

கந்தன் என்றெரு வண்டிக்காரன் இருந்தான். வண்டி இழுப்பதற்கு அவன் ஒரு குதிரையை வைத்திருந்தான். வண்டி ஓட்டும் தொழிலைக் கொண்டே அவன் ஜீவனம் நடத்தி வந்தான். அதனல் அவன் தனது குதிரை மீது அதிக அன்பும் அக்கறையும் காட்டினன்.

நாளாக ஆக கந்தனுக்குச் சவாரிகளும் அதிகரித்துவந்தது. பணமும் அதிகம் அதிகமாகச் சேர்ந்தது. சிறிதுகாலத்தில் கந்தன் ஒரு சிறிய பணக்காரனகிவிட்டான். பணக்காரனகிவிட்டவுடன் தான் ஒரு எஜமானகவும் தன் கீழ் அடிமைகள் இருக்கவேண்டுமென்றும் கந்தன் ஆசைப்பட்டான். எனினும் வண்டித் தொழிலை விட்டுவிட அவன் விரும்பவில்லை.

கந்தன் தன் கீழ் ஓர் ஆளை அமர்த்திக்கொண்டான். வண்டியையும் குதிரையையும் அவனிடம் ஒப்படைத்தான். வண்டித் தொழிலை வேலைக்காரனே நடத்திவந்தான். கிடைக்கும் பணத்தை எஜமானிடம் கொடுத்து, தன் சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொள்வான்.

புதிய ஆள், அவனது எஜமானைப் போல, குதிரையிடம் அன்புகாட்டவில்லை. குதிரைக்குத் தீனி வாங்குவதற்குப் பெறும்காசையும் அவனே திருடிக் கொள்வான். இப்படியே நாட்கள் பலநகர்ந்தன. குதிரை மெலிந்தது. வண்டி இழுக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதை அறிந்த குதிரைச் சொந்தக்காரன் குதிரைமீது வெறுப்புக் கொண்டான். அடித்து வெளியே துரத்தும்படி வேலையாளிடம் கூறினன். வேலையாளும் அவ்வாறே செய்தான்.

குதிரையில்லாமல் வண்டித் தொழில் ஓடவில்லை. அதனல் கந்தனுக்குக் குதிரை அவசியமாயிருந்தது. தனது சேமிப்பில் ஒரு தொகைப்பணத்தைத் தன் வேலைக்காரனிடம் கொடுத்து, 'எங்காவது தேடி நல்ல இனக் குதிரை கொண்டு வா' எனப் பணித்தான். வேலைக்காரனும அதற்கிணங்கி, குதிரை வாங்கக் கிளம்பினன்.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி... குதிரை வாங்கப் போன வேலைக்காரன் இன்னும் திரும்பிவரவேயில்லை. கந்தனும் ஒவ்வொருநாளும், ஒவ்வொரு விநாடியும் அவனுக்காகக் காத்துக் காத்து ஏமாந்தான். போனவன் போயே விட்டான். கந்தனிடம் எஞ்சியிருந்த சிறுதொகைப் பணமும் கரைந்துவிட்டது. அன்ருடச் சாப்பாட்டுக்கே கஷ்டம். தன் குதிரையை ஒழுங்காகப் பராமரித்து தொழிலை தானே நடத்திவந்தால் இக் கஷ்டம் வருமா? கந்தனுக்கு இப்பொழுதுதான் அதைப் பற்றிய கவலை வருகிறது. ஆனல் போனகுதிரை திரும்பிவருமா? எப்படியும் குதிரையைப் பிடித்தே தீருவதென்று கந்தன் பிடிவாதமாகப் பசியுடன் கிளம்பிவிட்டான். பாவம் கந்தன்.

### மழையே வா!

-தையல் இராஜரத்தினம்-

மழையே மழையே வா வா
மாரி மழையே வா வா
உழவர் உன்னைக் காணமல்
உள்ளம் வாடி நிற்கின்ருர்

●

முகிலைச் சுமந்து செல்கின்
ருய்
முறையே முழக்கம் செய்
கின்ருய்
மலையைக் கடந்து போகின்
ருய்
மனதாய் இறங்கி வாராயோ

●

காலம் எல்லாம் உனக்காக
காத்து நிற்கும் உழவர்களை
ஏனே வாட்டி வதைக்கின்
ருய்
என்றும் கருணை புரியாயோ

●

மக்கள் வெப்பம் தாங்கா
மல்
மகிழ்வுடன் உன்னை வர
வேற்க
உலசம் உய்ய மனதுடனே
ஒருதரம் இறங்கி வாராயோ

# நியதி

—இ. நாகராஜன்—

எட்ட நின்று பார்க்கும் விழிகளுக்கு இளமை மதர்த்துப் பொங்கும் பருவத்தில், அதனோடு ஒட்டிவரும் உணர்ச்சி அலைகளை அடக்கி ஒடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்காளான பெண்ணின் வைதவ்ய நிலையை எடுத்துக்காட்டுவது போன்ற வெளி ஒன்று. தென்படும்.

ஆனால் அந்தப் பருவப் பெண்ணின் சாகாத ஆசைகளை நினைவூட்டுவது போல் ஒரு சில கருவைப் பூண்டுகள் நிலத்தோடு ஒட்டி வளரவும் செய்தன. அவை இருந்தென்ன இல்லாவிட்டாலென்ன? அந்தப் பிராந்தியத்துக்குரிய 'வெளி' என்ற அவப்பெயரை மழுங்கடிக்கச் சக்தியற்றவைதாம் அவை.

மேய்ச்சலைத்தேடி நாலுதிசையும் அலையும் கட்டாக்காலிகள் கூட நப்பாசையோடுதானும் அங்கு செல்வதில்லை. இப்படி ஜீவன்களின் புழக்கத்துக்கு அருகதையற்றதான -தன்சதையோடு ஒட்டியதான அந்த வெளியைமாற்றாந்தாயின் மனோபாவத்துடன் இயற்கை கண்காணித்திருந்தது எதற்கோ? அது, அதுக்குத்தான் வெளிச்சம்.

* * *

காலமென்ற நீண்ட அரவம் தனது குறுங்காலால் ஊர்ந்து ஊர்ந்து மனிதனின் அறிவென்ற முயல் வேகத்தை வெற்றிகண்டு எக்காளமிட்டுச் சென்றுகொண்டிருந்தது. அதன் எண்ணிக்கை எத்தனையோ? அறிந்தவர் யார்?

இப்படி மனிதன் அறியாத - அவனின் யத்தனங்களுக்கு இலக்காகாவிடினும் எல்லாமே மாற்றத்துக்குள்ளாக வேண்டுமென்ற விதி பொய்த்துவிடவில்லை.

நித்தியம் அநித்தியமாவதும், அநித்தியம் நித்தியமாவதும் போல் மயக்கும் பிரபஞ்சத்தின் மாற்றத்தோடு மயக்குகின்றதோ என்னவோ? எத்தனையோ பருவகாலங்கள் அதாவது முன்பனி, பின்பனி, இளவேனில்,முதுவேனில், கோடை, மாரி இப்படி மாறி மாறிக் கடந்து, மீண்டும் தோன்றி மறைந்து வரும் வேளையில்...

நீரின் இதத்தையோ, வரட்சியின் வேக்காட்டையோ பற்றிப் பொருட்படுத்தாத அந்த வெளியிலும் ஒரு மாற்றம்.

ஒரு சிறிய செடி கால்கொண்டு, காலத்தோடு ஒட்டி வளர்ந்து பருத்துச் சடைத்து சர்வாதிகாரத் திமிருடன் தலைநிமிர்ந்துகொண்டது. அந்த அற்புதத்தை அறியவோ, அதன் தன்மையை ஆய்வு செய்யவோ எத்தகைய தாவர வல்லுநரும் குதிக்கவில்லை. காலம் நகருகிறது...

* * *

இல்லாத ஒன்று இருக்க வேண்டுமென்றால்தொடர்பான விதியின் சம்பிரதாயப் போக்கை அனுசரிக்கவேண்டும்.

இப்போது வசந்தருது,

இயற்கையின் இன்பம் இதுதான் போலும். எங்கும் இனிமை! ஆசைகளை வெறுத்தொதுக்கி ஓடியவர்களைக் கூடப் பாசத்தின் பலமான கரங்கள் இணைக்கத்தூண்டும் சூழ்நிலை. மொட்டையாகியமரங்களில் துளிர்கள். மாமரங்களில் செந்தீக் கொழுந்துகளை நினைவூட்டும் தளிர்கள். பசுமை மிளிர் செடிகளில் எல்லாம் ஆண்டவன் அழகை அப்படியே கொட்டிக் குவித்துவிட்டிருந்தான். வண்ண மலரினங்கள் ஒருசில மரங்களை எழில் திரையால் போர்த்தின. அந்த மலரினங்களைநாடிச் சுருதிலயத்தோடு வண்டுகள் பாடிப்பறந்தன. பேடைக்குயில் ஆணின் அன்பை நினைந்து கானம்மிழிற்றுகிறது. இப்படி உலகத்து ஜீவன்கள் தம் கடந்த காலக் கவலைகளை மறந்து நிகழ்கால இன்பத்திலேயே மூழ்கும் வேளையில் ...

அந்தப் பொட்டல் வெளியில் சுயமாகத் தோன்றிய அந்தச் செடியை மட்டும் காலதேவன் சும்மா விட்டுவைப்பானா? தோன்றாத ஒன்று தோன்றிய பிறகு உலகத்தின் சங்கிலித் தொடருடன் ஒத்து இயங்கத்தானே வேண்டும். இல்லாத ஒன்று இருக்கின்றதானால் இருக்கவேண்டிய பிரமாணத்துக் கிசையவே வேண்டும். ஆனால் அற்புதமாக அந்தப் பிராந்தியத்தில் தோன்றிய அச் செடியின் பிரலாபத்தை இன்னும் அதிகப்படுத்தவோ என்னவோ அதில் பூத்தமலரும் புதுமையானதாக அமைந்துவிட்டது.

ஜகத்தின் அத்தனை எழிலையும் தனதாக்கி, தேர்ந்த சைத்திரிகனாற்கூடப் பகுத்தறியமுடியாத வண்ணச்சேர்க்கை பலவற்றைக் கொண்டதான அந்த மலர் உச்சாணிக் கொம்பரில் இருக்கும் கம்பீரமே கம்பீரம்!

தனிக்காட்டு இராசாவாக மிளிரும் அம்மலர் அழகோடு மட்டும் மலர்ந்து விடவில்லை. இயற்கை அன்றுவரை எம்மலருக்கும் அளிக்காத அந்தச் சேர்க்கைகளை அதனகத்தே கொள்ளக் கொடுத்தது.

பொய்யாய்ப் பழங்கதையாய், நேற்றிருந்த தோற்றத்தைப் போக்கடித்து தன்னகத்தே ஒதுங்கிச் செல்லும் ஜீவன்களை அழைக்கவேண்டுமெனக்கருதி உச்சாணிக்கொம்பில் புன்னகை செய்துகொண்டிருந்தது மலர். அதன் தோற்றம் சுற்றுப்புறத்துக்கே ஒரு தனிச் சோபை! அதன் அமைப்பே அலாதி! காலம் என்ற மயன், இதுவரை அந்தப் பிராந்தியத்தில் கொண்டிருந்த பராமுகத்தை மாற்றிய தன் பேறு அது! கவிஞனின் நெஞ்சைக் கவர்ந்து நீண்டு, நிலைத்து வாழவேண்டியகாவிய நாயகியாக மிளிரவேண்டிய பெருமிதம் கொண்டது அந்த மலர்.

உலகத்தின் அணுப்பிரமாண இடத்தையெல்லாம் விட்டுவைக்காது நுழைந்துலவும் தென்றலின் நுட்பவிழிகளிலே அந்தமலர் பட்டுவிட்டது. மெத்தென்ற அதனை தன் இனிய கரங்களால் அலைந்து கொண்டே நாலு திசையும் பரந்து ஓடியது தென்றல்.

அப்பப்பா! தென்றலின் உழுவினால் அதற்குரிய பிரலாபம் அனந்தம். ஓடிச்செல்லும் தென்றல் எதிரேவந்த வண்டின் நாசியிலே மலரின் நறுமணத்தைப் பாய்ச்சியது. வண்டுதன்னிலே மறந்தது. அன்றுவரை தன்வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஏனைய மலர்களைத் துறந்து இனிமையான கீதமிசைத்துக் கொண்டே வெளியை நாடிச் செல்கின்றது.

ஆயுளில் என்றைக்கும் காணாத புதுமையல்லவா! இனிமையோடு கூடிய எழிலும், எண்ணத்தால் சிறைப்பிடித்துவிட முடியாத மணமும் இழைய இயற்கையின் திலகமாக அந்த மலர் உச்சாணிக்கொம்பர் என்னும் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தது.

வண்டின் விழிகளிலே ஆராத ஆவல். படாரெனப் பாய்ந்து மலரைத் தழுவிக்கொண்டது. என்ன இதம்! என்ன பரிமளம்! தனது இனிய சொண்டை வைத்து மலரின் ஜீவசக்தியையே உறிஞ்சிவிட முயன்றது.

ஒரே நாளில், அந்த மலரின் இனிமையைச் சுவைத்துவிடல் ஆகாது. அதனது பிரயத்தனங்கள் அனர்த்தமாகின. சுவைக்கச் சுவைக்க தெவிட்டா சுருசி அது.

மாலையின் வரவுகண்டுதனது செவ்விய தோற்றத்துடன் செங்கதிரோன் அத்தமன கிரியில் ஆழ்ந்தான். வண்டு நிலைத்து அங்கே நிற்கமுடியவில்லை. இருள் கவியத் தொடங்கியதும், மலரின்மீது நீடித்துத் தங்கியிருக்கவில்லைவண்டு. உள்ளத்திலும் உடலிலும் நிறைவுறாதாபத்துடன் அந்த மலரைவிட்டு வண்டு திரும்பிப் பூடடைந்தது. குறுகிய கால இடைவெளியானாலும், அந்த அனுபவம் மகத்தானது.

இருளின் நெடிய கரங்களுக்கிடையில் சிக்குண்டிருந்தது உலகம். மலரின் நினைவிலே இரவைச் சிவராத்திரியாக்கி நெளிந்து கொண்டிருந்தது வண்டு.

விடிந்தது.

பஞ்சவர்ணம் கொண்ட மேகத்திட்டுக்கள் சடைநாய்க்குட்டிபோல் ஒன்றோடொன்று கட்டித் தழுவின. பரிதியின் மஞ்சள் வர்ணம் பிரகிருதியின் ஒவ்வொரு அணுவையும் உசுப்பி, ஊக்கத்துடன் நாளாந்த கடமைக்கு வழிவகுத்தது. நேற்றைய சோர்வு நீங்கிய தெம்புடன் ஜீவராசிகள் நித்திய கடமையைச் செய்யக்கிளம்பின.

பூண்டிலுறங்கிய வண்டு உள்ளத்தில் அரும்பிய ஆராத ஆனந்தத்துடன் மலரை நாடிப் பறந்துகொண்டிருந்தது. வழியனைத்தும் அமைந்துள்ள மரஞ்செடி கொடிகளிடையே பல வர்ணமலர்கள் இயற்கையின் புன்னகையைக் காட்டிக்கொண்டிருந்தன. அவற்றை இலட்சியம்செய்யவில்லை வண்டு. அதனது குறிக்கோள் ஒன்றே ஒன்று. அந்தப் புதிய மலரை—முற்று முழுதாகத் துய்த்து தனது இன்பத்தைப் பூரணப்படுத்தவேண்டுமென்பதே!

பறந்தது. அதன் சிறியவாயிலிருந்து என்றுமே பிறக்காத இசை, அந்தப் பிராந்தியம் முழுவதும் உள்ள அசேதனப் பொருட்கள் கூட மயங்கித் தியங்கின.

அதோ அந்த வெளி

அந்தச்செடியின் பசுமைதான் என்ன? சுற்றியுள்ள பிராந்தியத்துக்கே புதுமையை வாரியிறைக்கும் அதன் தோற்றம் வண்டின் விழிகளில் தென்பட்டது.

வண்டு இராமனின் கைவாளிபோல் ஒரே இலக்காக உச்சாணிக் கொம்பரை நாடிப் பறந்தது. ஆனால்......

அந்த மலர்?

இதயத்தையே தனதாக்கிய மலர்... நேற்று இராஜ கம்பீர்யத்துடன் பிராந்தியத்தின் எழிலரசியாக விளங்கிய மலர்......?

"ஆ! என்னாசைக்குரிய மலரே! நீ எங்கே? நேற்று இந்தப் பிராந்தியம் முழுவதையும் தனி ஒருத்தியாக நின்று ஆட்சி செலுத்தினாயே! இன்று......உன் அழகுத் திருவுருவம் எங்கே? உன் நினைவில் இரவைப் பகலாக்கி நெளிந்துகொண்டிருந் தேனே! உன்னையார் பறித்தார்கள்? நீ எங்கே?......எங்கே?" இப்படியாக அந்தப் பிராந்தியம் முழுதும் கேட்கக்கூடியதாக தனக்கு இயற்கையாக உள்ள தொனியைவிட மிக மிக உரத்த ஓசையுடன் வண்டு சுற்றுகிறது.

அந்த வேளை......

"உம்! உம்!" என்ற தீனக் குரல் வண்டின் காதில் விழுந்தது.

"யாரது?"

"உம்! உம்!"

மரத்தின் உச்சியை நோக்கிப்பறந்த வண்டு கீழ்நோக்கிப் பார்த்தது.

அங்கே......

நேற்று அந்தக் கொம்பிலிருந்து அரசோச்சிய மலரா இது! மரத்தின்மீதிருக்கையில் அதற்கமைந்திருந்த கம்பீரம் அனைத்தும் அற்றொழிந்துவிட்டதான நிலை. வண்டின் விழிகளில் நீர்த்திவலைகள்.

"என்னாசை மலரே! நேற்று மலர்ந்து இந்த வாழ்விழந்து கிடந்த வெளிக்கு அதியுன்னத சோபை அளித்தாயே. இன்று நீயா அழியப் போகின்றாய்?

"நான் சாவதுதான் தலைமையான செயல். வண்டே, எனது வாழ்வின் உயிரோட்டம் எனது சாவிலேதான் தங்கியுள்ளது. ஏனையஜீவராசிகளைப்போன்று சுயநலத்தையே இலக்காகக் கொண்டவளல்லநான். எவ்வளவு குறுகிய காலத்துக்குள் என்னை அழித்துக் கொள்ள முடியுமோ அதற்குள் அழிவுறுவதுதான் சிறந்தது. அந்த உண்மையின் மூலம் பெரிது."

"என்னை வேதனைப் புயலில் சிக்குப்படவிட்டு நீ சாகின்றாய். இப்படி மற்றைய ஜீவனின் வருத்தத்திலே நீ என்ன அமைதியைக் காணப்போகின்றாயோ, நானறியேன்!"

மலர் மெதுவாகச் சிரிக்கின்றது. ஆனாலும் அந்த ஒலி வண்டின் செவிப்பறையைத் தாக்குகின்றது.

"மலரே! நீ சிரிக்கின்றாயா? சாகப்போகும் சமயத்திலும் சிரிப்பா?

"உன்னுடைய கதையை நினைத்தால் சிரிக்காமல் என்ன செய்வது?"

"ஏன்?"

"நேற்று புதுமையாக மலர்ந்த என்னைப்பார்த்து, யுகயுகாந்திரமாகக் காதல் கொண்டவனைப்போல் பேசுகின்றாயே, உன்னுடைய கரவான உள்ளத்தை அறியாதவள் என்று கருதிவிட்டாயா? நேற்றுவரை எத்தனை எத்தனை மலர்களிடத்தில் மோகித்துக் கட்டுண்டு கிடந்தாய். எண்ணிப்பார். அந்தப் பட்டியல் அளவற்றது. புதுமையாகப் பூத்த என்னிடத்தில் மற்றைய மலர்களிடத்துக் காணாத புதுமையான விசேடத்துக்காகவேதான் வந்தாய். புதுமோகத்தில் வழியில் கண்ட மலர்களையெல்லாம் துச்சமென மதித்து வந்தாய். ஆனால் நான் அழிந்துவிட்டால் ......பிறகு?"

அந்த வார்த்தைகளுக்குவண்டினால் பதிலிறுக்க முடியவில்லை. மௌனம் சாதித்தது.

மீண்டும் மலரே பேசத் தொடங்கியது.

"உனது உண்மையானமனப் பண்பைப் பிட்டுக்காட்டிவிட்டேன் என்று மௌனமாகிவிட்டாயோ? உனது உண்மையான பண்பைக் கூறும்போது உலகத்து மனிதர்களைப்போல் ஏன் மௌனம் சாதிக்கின்றாய். ஒன்றுமட்டும் உண்மை.

## ஞாயிறு கதை மலர்

"ஆம்! எனக்குமட்டுமல்ல, உலகத்தில் நிரந்தரமாக வாழப் போகின்றதாகக் கற்பனை செய்து கொள்ளும் அனைத்துக்கும் இதே முடிவுதான்."

"உன்னுடைய கருத்துச் சரி' ஆனால் உன்வரை ஆண்டவன் தந்த வாழ்க்கை மிக மிக அற்பம். சே! எத்தனை அழகுடன் இன்பத்தின் தனியுருவாக நீ நேற்று விளங்கி அந்தப் பிரதேசத்துக்குச் சோபையையும், பெருமையையும் கொடுத்தாய். மிக மிக அற்பகால ஆயுள். இதற்குத்தானா நீ படைக்கப்பட்டாய். சர்வ ஜீவராசிகளும் உறங்கி எழும் கால எல்லைக்குள் உன் வாழ்வு முடிவதா? அநியாயம்."

"வண்டே! உன் ஆராத அன்பால் இப்படிக் கூறுகின்றாய். ஜகத்துக்கே பொதுமையான விதி இது. ஆனாலும் ஏனைய ஜீவன்களைவிட யாம் உயர்ந்தவர்கள். நரை—திரை—மூப்பு—பிணி ஆகிய உபாதைகளற்ற அமைதியாக நான் அழியப் போகின்றேன். இது மேலான வாழ்வுதானே. இந்த வாழ்வைக் கருத்தற்றதென்று கருதலாமா?"

"மலரே! நீ உனக்காக மட்டும் படைக்கப்படவில்லை! எனக்காகவும் படைக்கப்பட்டவள். உனது எழில் தோற்றத்தினால் எனது நெஞ்சிலே காதல் தீயை மூட்டிவிட்டு- இரவெல்லாம் யான் நொந்து வாட நீ மட்டும் சாவதால் ஆவதென்ன?

அதை நீ நம்பு நீ எனக்குத் தந்த இன்பத்தையே நான் மறக்கவில்லை. அந்த இன்ப அனுபவத்துடன்தான் நான் மரணத்தை வரவேற்கின்றேன். என்மரணத்துடன் உனக்குப் புதுவாழ்வது தருவது தான் எனது குறிக்கோள். அதுமட்டுமல்ல. 'யான் பெற்ற இன்பம் இந்த வையகம் பெறுக" என்ற தத்துவப்படி மற்றையவர்களும் வாழ எண்ணுவதே நம் பிறவியின் இலட்சியம்...'

"என்ன சொல்லுகிறாய், மலரே! தெளிவாகப்பேசு"

"அதோ, என்னைப் பிறப்பித்த தாயாகிய செடியைப் பார்!"

"ஏன்?"

"நான் சொல்லுகின்றேன், கவனித்துப்பார்!"

"எதைச் சொல்லுகிறாய்? ஒன்றுமே என் விழிகளுக்குப் புலப்படவில்லை."

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்தானே. அந்தச் செடியைக் கவனித்துப்பார். யான் இருந்த உச்சாணிக் கொம்பருக்குக் கீழே நேற்று அரும்பாக இருந்தவை இன்றுமலர்ந்துள்ளன."

"எங்கே? எங்கே? ஆ! என்ன எழில்! உன்னைவிட இளமையான மலர்கள்!......"

இவ்வாறுசொல்லிக்கொண்டு வீழ்ந்துகிடக்கும் மலரைக் கவனிக்காது, அளவற்ற ஆசையுடன் வண்டு கொம்பரை நோக்கிப் பறந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

அழகிய பெனியன் கால்மேஸ் !!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன
LEYDEN
பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லேடன்' பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது 'லேடன்' பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இருள்

## ஞாயிறு கதை மலர்

நாகபூஷணி பாலசுப்பிரமணியம்

அந்தப் பிரதேசம் முழுவதையும் ஆட்சி செய்துகொண்டிருந்த மாரி காலத்து இருளையும், குளிரையும் லட்சியம் செய்யாது பேய்போல் ஓலமிட்டபடியே ஓடிமறைந்தது புகைவண்டி. முருகையனும் வழக்கம்போல் தெருவை அடைத்திருந்த இரண்டு கேட்டுக்களையும் திறந்துவிட்டு தன் குடிசையை நோக்கி நடந்தான்.

குடிசைக்குள்ளே பாயில் அமைதியாக ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள் அவனுடைய ஒரேமகள் ராஜி. முருகையன் பானையில் தண்ணீர் கொதிக்க வைத்துவிட்டு மகளின் அருகே வந்து மெல்ல அவளை எழுப்பினான். மெல்லப் புரண்டு கண்களைக் கசக்கியவாறே எழுந்த ராஜி தன் எதிரே தந்தையைக் கண்டதும் சிரித்தவாறே பாய்ந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். இந்தச் சிரிப்பு முருகையனின் நினைவில் சுந்தரியைக் கொண்டுவந்தது. 'அவளும் இப்படித்தான் சிரிப்பாள்' என்று எண்ணியவாறே ராஜியை இறுக அணைத்துக் கொண்டான். அவனுடைய யந்திர வாழ்க்கையிலே மனிதம் நிறைந்திருந்தது ராஜியால் தான். அவளுடைய நடையின் அழகில், பேச்சின் மழலையில், செய்கையின் ஒவ்வொரு அசைவிலும் அவன் தன் மனைவி சுந்தரியின் நிழலைத்தான் கண்டான்.

ராஜிக்கு தலைவாரி, பொட்டிட்டு, அழகு பார்த்தான். பின்பு கடையில் வாங்கிய இரண்டு அப்பங்களை பிய்த்து, துண்டு, துண்டாக ஊட்டினான். அவள் அப்பத்தை உண்ணும் இனிமையில் ஆடினான். வாயி விட்ட அப்பத் துண்டுகள் பிதுங்கி தேங்கியிருந்த பால் வாய் வழியே ஓடியது. முருகையன் அவள் உண்ணும் அழகை ரசித்தான். நேரம் ஒன்பது காட்டவே புகையிரத நிலையத்து எதிரில் இருந்த மரத்தின் கீழ் தன் குடைதிருத்தும் கடையை விரித்தான்.

முருகையன் இப்போது பத்து வருடங்களாக இந்த கேட்கீப்பர் வேலையைச்செய்து வருகிறான். இடை நேரத்தில் குடைகளையும் திருத்திக் கொடுத்து பிழைத்துக் கொண்டான். ஒரே நிலையில் அவன் இந்த வேலையில் நிலைத்துவிட்டதற்கு காரணம் அவனுடைய மனஉறுதியும், கடமை உணர்ச்சியும் தான். யந்திரத்துடன் யந்திரமாக வாழ்ந்த அவனுடைய வாழ்க்கையில் இனிய நினைவுகளை, அன்பு அலைகளை, மெல்ல மெல்ல உண்டாக்கினாள் சுந்தரி. அவன் சிந்தித்தறியாத, உணர்ந்திராத, புதிய வாழ்க்கையை சுவையுடன் சுந்தரியுடன் அனுபவிக்க ஆரம்பித்தான். அவனையும் தன்னையும் சுற்றியிருந்த அன்பு வலையை பன்னிரண்டு மாதங்களில் பிய்த்துக்கொண்டுதனது பிரதிபலிப்பை மண்ணில் தவழவிட்டு மறைந்து விட்டாள் சுந்தரி. தன் அன்புவலை அறுந்துபோனதைக் கண்டு துடித்தான் முருகையன். அமுதத்தைத் தந்து உதட்டை நனைத்துக்கொண்டவுடன் பறித்துவிட்டால் எப்படியிருக்கும்? நினைவுகளை தேய்த்துவிட்ட நாட்களை மறுபடியும் நினைத்து, நினைத்து ஏங்கினான். ஆனால் சுந்தரிவிட்டுச் சென்ற ராஜி அவனுடைய நினைவுகளை தன் பக்கமாக இழுத்துக் கொள்ள ஆரம்பித்தாள். அவள் வளர வளர அவளிடம் தோன்றிய மாறுதல்கள், அழகுகள் அவனை திகைக்க வைத்தன.

மூன்று வருடங்கள் முதிர்ந்தன. முருகையன் தன்னை ஏங்க வைக்கும் நினைவுகளை மறுபடியும் மலரவைக்க நினைக்கவில்லை. ஆனால் அந்த இனிய நினைவுகளை புதிய சூழ்நிலையில் பாசஉணர்ச்சியுடன் ராஜி மூலம் காணத்தொடங்கினான். ஒரு தாய் அடையும் இன்பங்கள், உணர்வுகள் அத்தனையையும் அவன் அடைந்தான். தனக்குதுணை, ஆறுதல், ஏன் உலகமே அவள் என்று கருதினான்.

நடுப்பகல் புகையிரத நிலையம் அமைதியடைந்துவிட்டது. பேச்சில் பொழுது போக்கும் சிலர் மேடை ஓரத்தில்அமர்ந்து அலட்டிக்கொண்டிருந்தார்கள். தேனீர் கடையொன்று தூங்கி வழிந்தது. எல்லோரும் சோர்வுற்ற அந்த நேரத்திலும் முருகையன் தன்வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். முருகையன் குடைக் கம்பிகளை வளைத்துப் பொருத்திக்கொண்டிருக்கும் போது "அப்பா" என்றவாறே ராஜி முதுகில் சாய்ந்து கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன ராஜி! நித்திரை வரவில்லையோ?"

"அப்பா! எனக்கும் பட்டுக் குடை வேணும்!" என்றவாறே அருகில் திருத்துவதற்காக வந்திருந்த ஒரு சிறிய பட்டுக் குடையை காட்டினாள்.

"ஓ! ராஜிக்கு பட்டுக் குடையா? நாளைக்கு கடையில் வாங்கித் தருகிறேன்" என்று சமாதானப்படுத்தினான். ராஜி அதே நினைவாக இருந்தாள்; இடைக்கிடை சிணுங்கினாள். மாலையும் விரைந்து வந்தது. முருகையன் குடைக்கடையை மூடிக்கொண்டு கிளம்பவேண்டும் என்ற அவசரத்தில் ஒழுங்குகள் செய்துகொண்டிருந்தான். ராஜி, சிணுங்கிச் சிணுங்கி சற்று உரத்தும் அழ ஆரம்பித்து விட்டாள்; ஆறுமணி வண்டி வருவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன.

ஆறுமணி வண்டிக்கு சற்று அதிகமான பிரயாணிகள் வருவது வழக்கம். புகையிரத நிலையம் இரைச்சலால் நிறைந்து இருந்தது. முருகையன் அவசரமாக கடையைப் பூட்டிக் கொண்டு கேட்டைச்சாத்த ஓடினான். ராஜி அவனைப் பின் தொடர்ந்தாள். அவள் தன்னைப் பின்தொடர்வதை முருகையன் கவனிக்கவில்லை. ராஜி வந்துகொண்டிருந்த இடத்தில் இருந்து சற்றுத் தள்ளி பின்புறமாக புகைவண்டி வந்து கொண்டிருந்தது. முருகையன் கேட்டை அவசரமாக இழுத்துப் பூட்டியபின் திரும்பினான். எதிர்பபுறத்தில், தொலைவில் ஏதோ ஒரு பொருள் தண்டவாளத்தின்மேல் மினுங்கியது. முருகையனின் நெஞ்சத்தில் சந்தேகம் மின்னல் போல் பாய்ந்தது. இடையில், கணநேரத்தில் ராஜியின் நினைப்பு. திரும்பிப் பார்த்தான். நெஞ்சு திடுக்கிட்டு துடித்தது. சில விநாடிகள் அவன் நெஞ்சம் போராடியது. ஏதாவது விபரீதம் ஏற்பட்டுவிட்டால் கவனக்குறைவால், சுயநலத்தால் ஏற்பட்ட அந்த விபத்து அவனை வாழ்நாள் முழுவதும் வாட்டி எடுத்துவிடும். காற்றென பறந்தான் அருகில்சென்று பார்த்த போது அது வெறும் காட்போட்டினால் செய்யப்பட்ட சருள் என்று தெரிந்தது. அவனுடைய இதயம் ஏமாற்றத்தால் வெம்பியது. உள்ளம் துடிக்க திரும்பிப் பார்த்த போது பெரும் பூதம்போல் ராஜி நின்ற இடத்தையும் தள்ளி புகையிரதவண்டி வந்து விட்டதைக்கண்டான். அவனுடைய இதயத்தில் தேங்கிநின்ற பாச உணர்ச்சி வெள்ளமாக பெருக்கெடுத்து பெரும்பிரளயமாடியது. அவன் மூளை நரம்புகள் குழம்பி வெடிக்க, ராஜி! என்று ஒருமுறை பேய்போல் அலறிவிட்டு திரும்பி ஓடினான். தலையைத் திருப்பாது இனி அவனுக்கு தேவையற்ற, ஜீவனில்லாத உலகத்தைவிட்டு ஓடுவது போல் ஓடினான்.

ஓர் உயிரைக் குடித்துவிட்ட யந்திரம்எந்தவித உணர்ச்சியும் இன்றி சற்று தள்ளிப்போய் நின்றது. இந்தக் கோரக் காட்சியை காணமுடியாமல் முகில்கள் பயங்கரமாக கருச்சன. காற்று ஓவென்று வீசியது. தென்னை மரங்கள் பேய்கள் போல் தலைவிரித்தாடின. அந்தப் பிரதேசம் சோக இருளில் மூழ்கியது.

ஒரு வருடம் ஓடி மறைந்தது. ஒருநாள் ஒரு பயித்தியக்காரன் அந்த புகையிரத நிலையத்திற்கு வந்தான். எண்ணெய்காணாததலை, கிழிந்த அழுக்குத்தோய்ந்த ஆடை, எலும்பு தெரியும் உடல், புரியாத முணுமுணுப்பு இவ்விதகோலங்கொண்ட அந்த உருவத்தை கண்ட நிலையஅதிபர்வாய்விட்டு அலறினார். "யார் முருகையனா?" அந்தப் பயித்தியக்கார முருகையன்பதறிதுடித்து அழுதான். பின்பு வயிறு குலுங்க சிரித்தான். புகையிரத நிலையத்தைச் சுற்றிசுற்றி அலைந்தான். ஒவ்வொன்றையும் கூர்ந்து பார்த்தான். கடைசியில் ராஜி இறந்தஇடத்திற்கருகில் சென்றதும் அவ்விடத்திலேயே படுத்துக்கொண்டான். அவனுக்கு புரிந்துகொள்ளும் சக்தி இல்லாவிட்டாலும், ஒட்டிய உணர்வின், இரத்தத் தொடர்பின் சக்தியால் அவன் அங்கே படுத்துக்கொண்டான் போலும். அவனைப் பலவந்தமாக மற்றவர்கள் அவ்விடத்திலின்றும் இழுத்துவந்தார்கள். ஆனால், அன்றிரவு அவன் யாரும் அறியாமல் தன் செல்வம் கடைசியாக நின்ற இடத்தில் வந்து அமைதியுடன் தூங்கினான். பயங்கரக் கூச்சலுடன் நான்குமணிக்கு வந்த புகையிரதவண்டி வழக்கம் போல், மகளின் உயிரைக் குடித்த அதேஇடத்தில் தந்தையின் உயிரையும் பறித்துக் கொண்டு விரைந்தோடியது. அது மறைந்ததும் எங்கும்ஒரே இருள் சூழ்ந்தது.

# நியதி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அரும்பாகி - இன்று மலர்ச்சிபெற்றுவிட்ட இளம் மலர் தனது இனிய கரங்களை நீட்டி வண்டைக் கைலாகு கொடுத்து வரவேற்கின்றது.

வண்டு அந்தப் புதுமலரின் இனிய அதரங்களில் தனது இதழ்களை வைத்து ஆலிங்கனம் செய்கின்றது. நேற்று அந்தக் கொம்பருக்குப் புதுமை கொடுத்த பழமலரின் மேலான தியாகத்தை- தன்னலமற்ற தியாகத்தைப்புரிந்து கொள்ள அந்த இளம் மலருக்கும் பக்குவம் போதாது!

கீழே விழுந்துகிடந்த மலர் தனது சோரும் விழிகளினால் அந்த நிகழ்ச்சியைப்பார்த்தது. ஆனால் எந்தவிதமான கல்மிஷமுமற்ற முகபாவனையோடு தனது கண்களை மூடிக்கொள்ள வேண்டிய வேளை வந்தது. அந்த வேளையை எவருமே தடுத்து நிறுத்தற்கில்லை.

இந்த வேதனையை கொம்பரிலுள்ள மலரும் வண்டும் கவனித்ததாகத் தெரியவில்லை.

அதுவரை தென்றலாக வீசிய காற்று இயற்கையின் கோரத்தனமான முடிவைக் கண்டு ஆத்திரம் கொண்டது போல சற்றுத் தீவிரகதியுடன் வீசும்போது, வீழ்ந்த மலர் உருண்டு உருண்டு உதிர்ந்த இலைச் சருகுகளின் கூட்டத்துள் கலந்து கொண்டது.

அந்த நியதியின் கோட்பாட்டைத் தகர்த்தெறியவல்லவர் யார்?

மோட்டோர் வண்டி உரிமையாளருக்கு ஒரு நற்செய்தி!

உங்கள் மோட்டோர் வண்டிகளுக்கு வரும் பிழைகளுக்கு குறைந்த செலவில், குறுகிய காலத்தில், நம்பிக்கையும் உத்தரவாதமும் தரக் கூடிய சிறந்த சேவைக்கும்

வண்டிகள் விற்பனைக்கோ அல்லது வாங்கவோ வேண்டுமா?

இன்றே நாடுங்கள்

வின்ஸ்லோஸ்

ஒட்டோ மோபைல் என்ஜினியர்ஸ்

மின்சார நிலைய வீதி, [போன்: 269] யாழ்ப்பாணம்.

WINSLOWS Automobile Engineers

Power House Road, Jaffna.

பொறியியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மேற்பார்வையில் பயிற்றப்பட்ட திறமை வாய்ந்த உதவியாட்களின் உதவியுடன் சிறந்த சேவை செய்து வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அமெரிக்க அறுவை மருத்துவம்

# விலங்குகளின் உறுப்புகளை மனிதனுக்கு ஒட்டுகிறார்கள்

மருத்துவத்துறையில் மிக முக்கியமான இலட்சியத்தை நோக்கி அமெரிக்க அறுவை மருத்துவர்கள் மெதுவாக, ஆனால் நிதானமாக முன்னேறுகின்றனர். இலட்சியம் இது தான். உயிர் நிலை உறுப்புகளை மனிதனிடமிருந்து பெயர்த்து மனிதனுக்கு ஒட்டவைப்பது; விலங்குகளிலிருந்து பெயர்த்து மனிதனுக்கு ஒட்டவைப்பது.

விலங்குகளில் சிறு நீரகங்களைப் பெயர்த்து மனிதனுக்குப் பொருந்தும் பணியாக அமெரிக்காவில் சென்ற பல மாதங்களில் நடந்த அறுவைச் சிகிச்சைகள் உலகுக்கு முதன் முதலாக அறிவிக்கப்பட்டன. சிறு நீரகங்கள், நோயுற்றதன் காரணமாக மரணம் உறுதி என்று முடிவு செய்யப்பட்ட நோயாளிகளைச் சாவிலிருந்து காப்பாற்றும் முயற்சியைக் குறிப்பிடுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்தது இது. கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த ஒருவருக்கு வாலில்லாக் குரங்கு ஒன்றின் இருதயம் பொருத்தப்பட்டது. மிகத் துணிச்சலான இச் செய்கை உறுப்புகளை ஒட்டவைக்கும் அறுவை மருத்துவ முறைகள் எவ்வளவு முன்னேறியுள்ளன வென்பதைக் காட்டுகிறது. இவ்வாறு ஒட்டவைக்கப்பட்ட இருதயம் நோயாளி மரிப்பதற்கு முன் ஒரு மணி நேரம் இயங்கிக்கொண்டு இருந்தது.

விலங்குகளிலிருந்து உயிர்நிலை உறுப்புகளை மனிதனுக்கு பொருத்தும் சிகிச்சைகள் இப்பொழுதுதான் துவக்கப் பட்டுள்ளன. இந்த அறுவை சிகிச்சை இல்லையேல் மரித்து விடக்கூடிய மிகக் கடுமையான நோய்வாய்ப்பட்டுள்ள நோயாளிக்கு, ஆராய்ச்சி பூர்வமான அறுவைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. விலங்கின் சிறு நீரகங்கள் பொருத்தப்பட்ட 9 நோயாளிகளில் ஆறுபேர் இன்னும் உயிருடன் இருக்கின்றனர். ஆனால் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பர் என்பதை மருத்துவர்களால் உறுதியாகக் கூறமுடியவில்லை. இந்த அறுவை சிகிச்சைகள் குறிப்பிடத்தக்கவை. ஏனெனில் நோய் இன்னமும் முற்றாமல் இருக்கும் மற்ற நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற இவை வழிகாட்டுகின்றன.

1963-ம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்க அறுவை மருத்துவர்கள் உலகிலேயே முதன் முதலாக ஒரு மனிதனிடமிருந்து நுரையீரல், கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றைப் பெயர்த்து இன்னொரு மனிதனுக்குப் பொருத்தினர். இதுவரை சிறு நீரகம் ஒன்று தான் இவ்வாறு பொருத்தப்பட்ட உயிர்நிலை உறுப்பாக இருந்தது.

இதில் கூட நோயாளி கொஞ்ச நேரம் தான் உயிருடன் இருந்தான். ஆனால் மரணம், ஒட்டவைக்கப்பட்ட உறுப்பு செயலிழந்து போனதால் ஏற்படவில்லை.

1963-ம் ஆண்டில் மனிதனிடமிருந்து சிறு நீரகத்தைப் பெயர்த்து மனிதனுக்கே ஒட்டவைப்பதில் அமெரிக்க அறுவை மருத்துவர்கள் பல முயற்சிகள் செய்தனர். உறவினரல்லாதவர்களிடையேதான் பல முயற்சிகள் செய்யப்பட்டன. சென்ற ஆண்டு, அதற்கு முந்திய ஆண்டுகளை விடச் சிறந்த பலன்களைக் கொடுத்தது.

இரட்டையர்களாகப் பிறந்தவர்களிடம் தான் திசுக்கள் ஒரே மாதிரியாக இருக்கும். எனவே சிறு நீரகத்தைப் பெயர்த்து வெற்றிகரமாக ஒட்டவைப்பது பல ஆண்டுகளாக இரட்டையர்களிடம்தான் முடிந்தது. உறவினரல்லாதவரிடமிருந்து நல்ல ஆரோக்கிய நிலையில் இருக்கும் உறுப்புகளைப் பெயர்த்து நோயுற்ற உறுப்புகளுக்குப் பதிலாக ஒட்டவைக்க அறுவை மருத்துவர்கள் முயன்றபோது இவ்வாறு வெளியே இருந்து வந்த திசுக்களை நிராகரித்து விட்டது நோயாளியின் உடல்.

அண்மையில் ஏற்பட்ட இரண்டு கண்டுபிடிப்புகள் ஒட்டவைக்கும் சிகிச்சை சாதாரணமாகச் செய்யக்கூடிய பணியாக்கிவிடும் என்று நம்ப இடம் தருகின்றன.

மருந்துகள், கதிரியக்கம் முதலியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், ஒட்டவைக்கும் உறுப்புகளை "வெளித் திசுக்கள்" என்று நிராகரித்து விட உடலுக்கு இயற்கையாக அமைந்துள்ள இயல்பை அடக்கிவிட மருத்துவர்கள் இப்பொழுது கற்றுவருகின்றனர்.

விலங்குகளின் உறுப்புகளை குளிர்ச்சாதனப் பெட்டியில் வைத்திருந்தால் பல நாட்களுக்குக் கெடாமல் அவற்றை வைத்திருக்க முடியுமென்று ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. எனவே இன்றிருக்கும் "கண் பாங்குகள்" போல் உறுப்புகள் சேமிப்பு நிலையங்களும் ஏற்படலாமென்ற நம்பிக்கைக்கு இடம் தருகிறது.

அதே சமயத்தில் மருத்துவர்கள் வலியுறுத்தும், இன்னும் தீர்க்கப்படாத மிகப் பெரிய பிரச்னையொன்றும் இருக்கிறது. அதுதான் வேறு ஒருவருடைய அல்லது விலங்கினுடைய திசுக்களை ஏற்க உடலின் எதிர்ப்பு. இந்த எதிர்ப்பு இயல்பைக் கட்டுப்

(9-ம் பக்கம் பார்க்க)

# கலை அரங்கம்

மாலா, பத்மினி அளிக்கும்

## 'அழகர் குறவஞ்சி', 'கண்ணகி' நாட்டிய நாடகங்கள்

நாட்டிய நட்சத்திரமான குமாரி வைஜயந்திமாலா தன்னுடைய மூன்றுவது நாட்டிய நாடகமான 'அழகர் குறவஞ்சி'யை தமிழ்வருடப்பிறப்பன்று சென்னையில் அரங்கேற்றப் போகிறர். இந்த நாட்டிய நாடகத்தில் வைஜயந்திமாலாவும் நாட்டியாலய ஸ்தாபனத்தின் ஆறுமாணவிகளும் பங்கு கொள்வார்கள். 'ஆண்டாள் திருப்பாவை', தாகூரின் 'சண்டாலிகா' ஆகியவற்றை நாட்டிய நாடகமாக அரங்கேற்றிய மாலா இதனையும் தாமே தயாரித்து அளிக்கிறர்.

### பத்மினியின் 'கண்ணகி'

திருமணத்துக்குப்பிறகுதிரை உலகுக்குத் திரும்பி பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் பத்மினியும் நாட்டிய நாடகங்களை நடத்திவருகிறர், அவரது குழுவினரின் இரண்டு நாட்டிய நாடக நிகழ்ச்சிகள பம்பாயில் மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்றன. 'கண்ணகி' என்ற இந்த நாட்டிய நாடகத்தில் பத்மினியும் அவரது குழுவைச் சேர்ந்த 16 பெண்களும் பங்குகொள்வார்கள்.

## படப்பிடிப்பில் கலந்துகொண்ட சென்னை பொலிஸார்

கடமை தவறுது நடக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றிய விறுவிறுப்பான கதை 'அல்லி' இப் படத்துக்காக ஒரு சிறைச் சாலைக் காட்சி சென்றவாரம் பரணிஸ்டுடியோவில் படமாக்கப் பட்டபோது தேனும்பேட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜவான்கள் அக்காட்சியில் பொலிஸ்காரர்களாகத் தோன்றினர்.

### சிவாஜி, ஸ்டேசன் மாஸ்டர் ஆகிறர்

"பந்தபாசம்" திரைப்படத்தைத் தயாரித்த சாந்தி பிலிம்ஸார் தங்களது 2-வது தயாரிப்பை தற்போது வாகினி ஸ்டுடியோவில் வளர்த்துவருகின்றனர். இப்படத்தில்சிவாஜி கணேசன் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராகவும் அவரது காதலியாக தேவிகாவும் நடிக்கின்றனர்.

## புதுமை விரும்பும் ஸ்ரீதர்

30 நாளில் ஒரு படத்தை தயாரித்து முடித்து ஒரு புது சாதனையை நிலைநாட்டிய ஸ்ரீதர் 15 நாளில் ஒரு படத்தைப் பூர்த்திசெய்யத் திட்டமிட்டுவருகிறர்.

புகழ்பெற்ற கிளியோபாத்ரா படத்தை தமிழில் டப் செய்வதற்கு அவரது உதவியைச் சமீபத்தில் சிலர் நாடியபோது 'இதனல் தமிழ் மக்களுக்கு விசேடமான நன்மை எதுவும் ஏற்பட்டுவிடாது. 'கிளியோபாத்ரா' கதை எத்தனையோ தடவை படமாக்கப்பட்டுவிட்டது' எனக்கூறி ஸ்ரீதர்மறுத்துவிட்டார்.

### 'வேட்டைக்காரன்'

ஆங்கிலத்தில் வெளிவரும் 'கவ்பாய்' கதைகளின் போக்கில் அமைந்த 'வேட்டைக்காரன்' படத்தில் எம். ஜி. ஆர். வேட்டைக்காரனுகவும் சாவித்திரி அவரது காதலியாகவும் நடிக்கிறர்கள், காடுகளைச் சுற்றி ஓடும் இக்கதையை ஆரூர்தாஸ் எழுதியிருக்கிறர். எம். ஜி. ஆரின் வீரதீரச் செயல்களுக்கு நிறைய இடமளிக்கும் இப்படம் எம். ஜி. ஆர். ரசிகர்களை மகிழ்விக்க சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

### பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சிவாஜி

பைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டராக சிவாஜி கணேசன் நடிக்கும் "நவராத்திரி" படம் துரிதமாக வளர்ந்து வருகிறது. இதில் நடிக்கும் சாவித்திரி சித்தக்குழப்பமுற்ற பெண்ணுக டாக்டரிடம் பேசும் ஒரு கட்டம் உண்டாம். ஏ. பி. நாகராஜன் கதைவசனம் எழுதி இப்படத்தை டைரக்ட் செய்கிறர்.

### சினிமாத்தொழிலுக்கு அரசாங்க உதவி

ஆந்திர இராச்சியத்தில் சினிமாத் தொழில் வளர்ச்சி அடையவேண்டுமென்பதற்காக ஆந்திராவில் எந்த மொழியிலும் எடுக்கப்படும் முழுநீளபடத்துக்கு 50 ஆயிரம் ரூபா உடனடியாக உதவித்தொகை வழங்கவும், எங்கு தயாரான தெலுங்குப் படமாயிருந்தாலும் சிறந்த படத்துக்கு 50 ஆயிரம் ரூபா பரிசு வழங்கவும் ஆந்திர சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது. இதுவிஷயத்தை அறிவித்த ஆந்திர இராச்சிய நிதி அமைச்சர், சினிமா ஸ்டுடியோ கட்ட முன்வருவோருக்கு 5 லட்சம் ரூபா கடன் கொடுத்துதவ சர்க்கார் முடிவு செய்திருப்பது பற்றியும் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் பெருஞ் செலவில் மற்ருெரு புதிய சினிமா ஸ்டுடியோ ஒன்றும் கட்டப்பட்டுவருகிறது.

### பத்மினி நடிக்க ஒப்பந்தம்

திருமண முடிவுக்குப்பின் கடந்த ஒருமாத காலத்திற்குள் சுமார் பத்துப்படங்களில் நடிக்க பத்மினி ஒப்பந்தமாகியிருக்கிறர்.

### கிளியோபட்ரா திக்விஜயம்

இன்று உலகின் பல பகுதிகளில் திரையிடப்பட்டுள்ள கிளியோபாட்ரா படத்தில் பிரிட்டிஷ் நட்சத்திரங்கள் மூவர் நடிக்கிறர்கள். எலிஸபெத் டேலர் கிளியோபாட்ராவாகவும், மேடையிலும் புகழ்பெற்றவரான ரெக்ஸ்ஹரிசன் ஜூலியஸ்ஸீஸராகவும் தோன்றுகிறர்கள். இப்படத்தை ஜெர்மன், ஸ்பானிஷ், இத்தாலி மொழிகளில் டப் செய்து வெளியிட்டிருக்கிறர்கள். இந்திமொழியிலும் இது டப் செய்யப்படலாம்.

## 12 மாடி தியேட்டரும் ஹோட்டலும்

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய ஹோட்டல் ஒன்று மொஸ்கோவில் கட்டப்பட்டு வருகிறது. ஹோட்டல் மொஸ்கோ என்பது இதன் பெயர். 12 மாடிக் கட்டிடம் 5000 பேர் தங்கலாம். இரண்டு. சினிமா தியேட்டர்களும் கலை நிகழ்ச்சிகள் நடத்தத் தனி அரங்கமும் கொண்டு சகலவிதமான நவீனவசதிகளுடன் இது அமையும்.

### 'ஸ்கூல் மாஸ்டர்'

பத்மினி பிக்சர்ஸார் மலையாள மொழியில் தயாரிக்கும் 'ஸ்கூல் மாஸ்டர்' படத்தின் படப்பிடிப்பு விஜயா ஸ்டுடியோவில் ஆரம்பமாகிவிட்டது. பிரேம் நஸீர், திக்குருசி, முத்தையா, அம்பிகா ஆகியோர் இதில் நடிக்கிறர்கள்.

### ராணி மங்கம்மாள்

மதுரையை ஆண்ட நாயக்கர் பரம்பரையில் தோன்றி வீர பராக்கிரமத்துடன் ஆட்சி நடத்திய ராணி மங்கம்மாளின் வாழ்க்கையை ஈஸ்ட்மன் கலரில் தயாரிப்பாளரும் டைரக்டரும் கதைவசன கர்த்தாவுமான ஏ. கே. வேலன் 'ராணி மங்கம்மாள்' என்ற பெயரில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறர்.

### மாருத உணவுப் பற்று

வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேறுவோரின் பேச்சு நடை உடை பாஷை முதலியவை நாளாவட்டத்தில் அமெரிக்க பாணியில் மாறி அவர் அமெரிக்கராகிவிடலாம். ஆனுலும் அவரது உணவுப் பழக்கம் எளிதில் மாறுவதில்லை. குடியேறிமூன்று அல்லது நாலு தலைமுறைகளாகிவிட்டாலும் சரி அம்மக்கள் தங்களது பழையநாட்டின் உணவு முறையைத்தான் விரும்புகின்றனர் என்று சமூக இயல் நிபுணரான டாக்டர் எமிநல்ஆல்பென் பெல்ஸ் கூறுகிறர்.

அறுவை மருத்துவம்

## விலங்குகளின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த மருத்துவர்கள் பல பல புற்று நோய் எதிர்ப்பு மருந்துகள், கதிரியக்கம் முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர். ஆனல் இந்த மருந்துகள் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை இழக்கச்செய்து நோய்க்கு உடலை உள்ளாக்கிவிடுகின்றன. எனவே உறுப்புகள் ஒட்ட வைக்கப்பெற்ற நோயாளிகள், எடுத்துக்காட்டாக, கப சுரத்தினல் மரிக்கின்றனர். மரணத்திற்குக் காரணமான கப சுரத்திற்கும் உறுப்பு ஒட்டவைக்க வேண்டிவந்த நோய்க்கும் சம்பந்தம் இல்லை.

மருத்துவ நுட்பப் பிரச்னைகளும் உள்ளன. புதிய உறுப்பை உடலின் இரத்தக் குழாய்களுடன் சரியாகப் பொருத்த வேண்டும். புதிய உறுப்பிலும் பழைய நோய் வராமல் தடுக்க வேண்டும். அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படக்கூடிய நஞ்சும் தவிர்க்கப்படவேண்டும்.

விலங்குகளுக்கிடையேஉறுப்புகளை ஒட்டவைக்கும் பணியில் அனுபவம் மிகுந்த நான்கு யு. எஸ். மருத்துவ நிலையங்கள் இப்பொழுது விலங்குகளிலிருந்து மனிதனுக்கு உறுப்புகளை ஒட்டவைக்கும் பணியைச் செய்கின்றன. வாலில்லாக் குரங்குகள், ஆபிரிக்கா தேசத்து பெரிய குரங்குகள், இன்னும் வேறு வகைக் குரங்குகள் முதலியவற்றை இதற்கு உபயோகிக்கின்றனர்.

லூஸியானு மாநிலத்தில் இருக்கும் டுலேன் மருத்துவ நிலையம் இங்குதான் விலங்குகளிலிருந்து மனிதனுக்கு உறுப்பு ஒட்டவைக்கும் முதலாவது அறுவை சிகிச்சை நடந்தது. கொளராடோ மாநிலத்தில் டென்வரில் இருக்கும் மியாமி பல்கலைக்கழக மருத்துவ நிலையம்; மிஸிஸிப்பி மாநிலத்தில் ஜாக்ஸனில் இருக்கும் மிஸிஸிப்பி பல்கலைக்கழகத்து மருத்துவ நிலையம்; ஆகியவையே இந்த நிலையங்கள்.

## விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்கு படமாக்கப்படுகிறது

இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாடு, ஆந்திரா இரண்டும் ஆற்றிய பங்கை எஸ். டி. சுந்தரம் படமாகத் தயாரிக்கிறர். இதில், சாதாரண தொண்டராகவிருந்து அகில இந்தியக் காங்கிரஸின் தலைவரான காமராசரின் சாதனைகள் இடம் பெறும் என்று தெரிகிறது. கவிஞரும் எழுத்தாளருமான சுந்தரம் சீன ஆக்கிரமிப்பைப் பற்றி ஏற்கனவே ஒரு படம் தயாரித்தவர்.

### வீரதளபதி வேலுத்தம்பி

ஓரியண்டல் மூவிசாரின் மலையாளப்படமான 'தளவாய் வேலுத்தம்பி' வீரதளபதி வேலுத்தம்பி என்ற பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டு இவ்வாரம் முதல் திரையிடப்பட்டுள்ளது. அம்பிகா, ராகினி நடித்துள்ள இப்படத்திற்கான வசனங்களை புரட்சிதாசன் எழுத, ஜி. விஸ்வநாதன் இயக்குகிறர்.

### விமானப்படை விழாவில் "நட்சத்திர"ப் பிரகாசம்

பெங்களூர் கண்டிரவாஸ்டேடியத்தில் விமானப்படை க்ஷேம நல நிதிக்காக சென்றவாரம் நடைபெற்ற களியாட்டவிழாவில் அகில இந்திய நட்சத்திரங்கள் பலர் பங்குகொண்டனர், சென்னையிலிருந்து சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன் சௌகார் ஜானகி ஆகியோர் சென்றிருந்தார்கள், 25 ஆயிரம் பேர் மட்டில் இக்களியாட்ட விழாவைக்கண்டுகளித்தனர்.

### ரிக்ஷா ரெங்கன்

பத்மினி- எம். ஜி. ராமச்சந்திரன் இணைந்து நடிக்கும் சதானந்தவதி பிக்சர்சாரின் 'ரிக்ஷா ரெங்கன்' படத்தின் படப்பிடிப்பு பிப்ரவரி 11-ம் திகதி நெப்டியூன் ஸ்டுடியோவில் தொடங்கியது.

## புராதன இலங்கையும் தமிழரும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர் போல் இ. பியன்ஸ் என்பார் வடமாகாணத்திலுள்ள கந்தரோடை என்ற ஊரைப் பற்றி எழுதுகையில் "இலங்கையின் புராதனகால சரித்திர வரலாறுபற்றிய அறிவு,விளக்கமடைய இந்த சிற்றூரைக் கொண்டே நாம் எவ்வளவோ தெரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. இந்தியாக்கரையிலிருந்து முப்பது மைல் சமீபமாக இலங்கைக் கரையை அடுத்து உள்ள ஓர் ஊர் கந்தரோடை. அக்கரையிலிருந்து மீன்பிடிக்கவரும் இந்திய மீனவர் தினமுமே காலை வேளையில் இவ்வூரைப் பார்த்துச்சென்றிருப்பார்கள். தங்கள் ஊரில் இதுபற்றி மற்றவர்களிடம் சொல்லியுமிருப்பார்கள். அவர்கள் மத்தியில் மாலுமிகள் தோன்றிய காலத்தில் அம்மாலுமிகளே இங்கு வந்து குடியேறி வசித்திருப்பார்கள். கிறிஸ்தவ சகாப்தத்துக்குமுன்னுக நிலைமை இதுவாகத்தானிருந்திருக்கும் சாதாரணமாக யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய இம் முடிவை அத்தாட்சிப்படுத்தவல்ல சான்றுகளை எப்படிப்பட்டும் சேகரிக்கலாம் என்றே சொல்வேன்."

மெர்சன் டெனன்ட், டபிள்யு. ஏ. எஸ். பேர்க், எம். பி.ஆரியபாலா எனப்பட்டோர் இக்கூற்றை ஆதரித்துள்ளனர்.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பழைய நாணயங்கள் போன்ற புராதன காலத்துப் புதை பொருள்கள் பல, வட இலங்கையானது விஜயன் வருகைக்கு வெகுகாலம் முன்னமே தமிழரின் வசிப்பிடமாகவிருந்தது என்ற உண்மையை நிலைநாட்டுகின்றன.

(தொடரும்)


4-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (அம்பாறை)

நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனேகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஜானகி — பி. எஸ். கோவிந்தன் நடிக்கும்

1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி

# உத்தியோக மொழி நிர்ப்பந்தத்துக்கு ஆட்சேபம்

## வடபகுதி ஆஸ்பத்திரி சிறுசேவையாளர் ஆர்ப்பாட்ட நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

சுகாதார இலாகா சிறு சேவையாளர்கள் உத்தியோக மொழியில் 5-ம் வகுப்பிலோ 7-ம் வகுப்பிலோ சித்தியடைந்திருக்க வேண்டுமென்றும் 1956-ம் ஆண்டிற்குப் பின் நியமனம் பெற்றவர்கள் அவ்வித தேர்ச்சி பெறுவிட்டால் சம்பள உயர்ச்சியே நிறுத்தி வைக்கப் படுமென்றும் கூறும் அரசாங்கத்தின் நிபந்தனையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமென்றும், இதனுல் பாதிக்கப்படும் தமிழ்ப்பகுதிச் சுகாதார சேவைச் சிறு சேவையாளரின் நலன் கருதி முதலில் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும் பின் கொழும்பில் நடத்துவதென்றும் அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆங்கிலேயரின் ஆட்சியில் இச்சிறு சேவையாளர்கள் தத்தம் சுயமொழியில் 5-ம் வகுப்பிலோ 7-ம் வகுப்பிலோ சித்தியடைந்திருந்தால் போதுமானதாகவிருந்தது. அப்படியிருக்க சுதந்திர இலங்கையில் தாய்மொழியில்லாத ஒரு மொழியைக் கற்கவேண்டுமென நிர்ப்பந்திப்பதை ஆட்சேபிப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஏனைய ஆஸ்பத்திரி சிறு சேவையாளர் சங்கங்களின் ஆதரவையும் திரட்ட வேண்டுமென்றும் இவ்வார்ப்பாட்டத்தில் தெறகிலங்கையிலுள்ள சிங்கள ஊழியர்களும் கலந்துகொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறு சேவையாளர்களுக்கு மொழி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டு சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம் நிதி அமைச்சருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளது.

---

நெல்லியடி பட்டினசபை

# புதிய தலைவராக திரு. பொன்னையா தெரிவு

## உப தலைவர் திரு. சின்னையா

உடுப்பிட்டி, சனி

புதிதாக உருவாக்கப்பட்ட நெல்லியடி பட்டினசபையின் முதலாவது தலைவராக 2-ம் வட்டார பிரதிநிதி திரு. வி. எஸ். பொன்னையா தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக திரு. கே. சின்னையா தெரிவசெய்யப்பட்டார்.

தலைவர் தெரிவு இன்றுகாலை யாழ்ப்பாணப் பகுதி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பதவிக்கு திரு. வி. எஸ். பொன்னையாவின் பெயரை திரு. மு. ஜெயசிங்கம் பிரேரித்தார். திரு. கே. சின்னையா ஆமோதித்தார். உபதலைவர் பதவிக்கு திரு. கே. சின்னையாவின் பெயரை திரு. மு. கதிர்காமத்தம்பி பிரேரித்தார். திரு. ஜெயசிங்கம் ஆமோதித்தார்.

தலைவர்தெரிவு நடைபெற்ற பொழுது திரு. பொன்னையாவை நால்வர் ஆதரித்தும் மூவர் எதிர்த்தும் வாக்களித்தனர். இச்சபையில் மொத்தம் ஏழு அங்கத்தினர்கள் உண்டு.

புதிய தலைவர் திரு. பொன்னையா பின்னர் உரைநிகழ்த்துகையில்; நேர்மையாகவும் உண்மையாகவும் தாம் உழைக்கப் போவதாகவும் தமக்கு ஏனைய அங்கத்தவர்கள் நல்ல ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

புலோலி அம்மன் கோவிலி இன்று ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

---

# சிங்கள தேர்ச்சிப்பரீட்சைகளில் புதிய திருத்தம்

## பாடவிதானங்களும் திருத்தப்பட்டுள்ளன

கொழும்பு, சனி

அரசாங்க ஊழியர்களுக்கான சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சைகளுக்கான பாடதிட்டமும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக திறைசேரி அறிவித்துள்ளது.

புதிய திட்டத்தின்படி நாலு தேர்ச்சிப் பரீட்சைகளே நடைபெறும். இதுவரை 3-ம் வகுப்பு, 5-ம் வகுப்பு, 7-ம் வகுப்பு 8-ம் வகுப்பு, எஸ். எஸ். ஸி. வகுப்புகளின் தராதரம் கொண்ட 5 தேர்ச்சிப் பரீட்சைகள் இருந்தன.

நாலு தராதரங்களுக்குமான தேர்ச்சிப் பரீட்சைகள் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல், அக்டோபர் ஆகிய மாதங்களில் நடைபெறும்.

முதலாம் தரத்துக்கான பரீட்சையில் ஒன்றரை மணித்தியால எழுத்துப் பரீட்சை நடைபெறும. இந்த விளுக்கவில் சொற்பிரயோகம், எழுத்துமுறை முதலியன அடங்கியிருக்கும். வாய்மொழிப் பரீட்சையும் நடைபெறும்.

இரண்டாம் தரத்துக்கான பரீட்சையில் உத்தியோகஸ்தர்களிடமிருந்து காரியாலய வேலைகளை சிங்களத்தில் நடத்தக்கூடிய தேர்ச்சி எதிர்பார்க்கப்படும்.

மூன்றும் தரத்திற்கான எழுதுப்பரீட்சையில் மூன்று மணித்தியால விணப்பத்திரத்துக்கு உத்தியோகஸ்தர்கள் தோற்ற வேண்டும். இந்த விணப்பத்திரம பாஷை, தமிழிலிருந்தோ அல்லது சிங்களத்திலிருந்தோ மொழிபெயர்க்கும் தேர்ச்சி முதலியவற்றை சோதிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

நான்காம் தரத்திற்கான பரீட்சைக்குத் தோற்றுவோர் சிங்களத்தில் கட்டுரை எழுதுமளவிற்கு தேர்ச்சியடைந்திருக்கவேண்டும்.

---


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சோமசெற் EY 4000 சீறிஸ் கேம்பிறிஜ் EN 8000 சீறிஸ் விறபனைககு உண்டு பிறிமியர் கபே மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1982

### தொய்வு, நீரிழிவு

குணபபடுத்த உத்தரவாதம் மந்தி மார், ஆசியற பிரபுக்கள் எமிடம சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பணம்.


---

# ராதாகிருஷ்ணன் மீண்டும் பொறுப்பேற்ருர்

புதுடில்லி, பெப். 22

இம்மாதம் 6-ம திகதி கணணில ஆப்பரேஷன் செய்து கொண்டதன் காரணமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இந்திய ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று ஜனுதிபதி அலுவல் பொறுப்புக்களை மீண்டும் ஏற்றுக்கொண்டார்.

# எல்லைப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா-சீன நட்புறவுச்சங்கம் அளிக்கும்வரவேற்புபசாரமொன்றில் கலந்துகொள்வார். அரசாங்க கட்சியின் தொழிற்சங்கங்கள் வாலிபமுன்னணியினர் ஆகியோரின் கூட்டமொன்றில் திரு சூ-என்-லாய் உரைநிகழ்த்துவார். இவை அவர் பங்குபற்றவிருக்கும் பொதுவைபவங்கள்.

கொழும்பில் அவர் கலந்து கொள்ளும் மற்ற வைபவங்கள், விஜயங்கள் குறித்து விபரமான நிகழ்ச்சி நிரலொன்றும் பத்திரிகைகளுக்குத் தரப்படவில்லை. நிருபர்கள் மகாநாடொன்றிலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிகிறது. அவரது விஜயத்தின்போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்திய-சீன எல்லைத்தகராறைத தீர்த்துவைப்பதில் பிரதமர் சிறிமா பெரிதும்அக்கறை கொண்டுள்ளதாக அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை-சீன இருநாடுகளுக்கிடையிலுமான கலாசார பொருளாதாரத் தொடர்புகள் குறித்தும் இலங்கைப் பிரதமர் சீனப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவாரென்றும் அறியப்படுகிறது.

இலங்கைப் பிரதமர் சிறிமாவும், சூ-என்-லாயும் கூட்டறிக்கையொன்றில் கையொப்பமிடுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சூ-என்லாய், வெளிவிவகாரத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் வர்த்தகத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் உட்பட 45 பேருடன் இங்கு விஜயம்செய்கிறா.

வெளிநாட்டுப் பிரதமர் ஒருவர் இவ்வளவு பெரிய தூது கோஷ்டியுடன் இங்கு வருவது இதுவே முதற்தடவை.

# முஸ்லிம் தலைவர்கள் கண்டனம்

கல்கத்தா, பெப். 21

கிழக்கு பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படும் விதம் மனிதாபிமானம், இஸ்லாமிய நோக்கு ஆகியவற்றுக்கு வெட்கமும், வேதனையும் அளிக்கிறது என மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 11 முஸ்லிம் தலைவர்கள் அறிக்கை விட்டிருக்கின்றனர்.

# சூ என்-லாய்....

1-ம் பக்கத் தொடர்ச்சி

எப்படியும் இந்தியாவுக்கு விஜயம் செய்வதன் மூலம் இதர நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறலாமென நம்புவதாகவும் ராஜீய வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இன்னெரு ஆசிய நாட்டுக்குத்தாம் விஜயம் செய்யவிருப்பதாக சீனப்பிரதமர் தெரிவித்ததைத் தொடர்ந்து இன்னெரு நாடு என்பது இந்தியாவாகத்தானிருக்கும் என்று ராஜீய வட்டாரங்கள் உறுதியாக நம்புகின்றன. சீனப் பிரதமரை இந்தியா வரவேற்கத்தயாராயில்லையெனில் அவர் மீண்டும் பர்மாவுக்குச் சென்று அதிபர் நீவின்னை மீண்டும் சந்தித்துப் பேசக்கூடுமென்றும் கூறப்படுகிறது.

---

கூப்பனுக்குத் துணி

# ஒழுங்கீனம் நடைபெற்ருல் துணிவிநியோகம்நிறுத்தப்படும்

## அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, சனி

கூப்பனுக்கு துணி விநியோகிப்பதில் ஒழுங்கீனங்கள் ஏதுவும் நடைபெற்ருல் குறிப்பிட்ட சங்கத்துக்கு அல்லது கூட்டுறவுக் கடைக்கான துணி விநியோகம் உடனடியாக நிறுத்தப்படும் என்று உணவு, கூட்டுறவு அமைச்சு எச்சரிக்கை செய்துள்ளது.

பங்கீட்டு முறையில் துணி விநியோகம் செய்வதற்கான தனது திட்டத்தை அமைச்சு தயாரித்துவிட்டது. 70-க்கு மதிகமான கூட்டுறவுக் சங்கங்கள், தங்களது 'கோட்டாக்களை' பெற்றுக்கொண்டுவிட்டன. அநேகமாக துணி விநியோகம் நாட்டின் சகல பகுதிகளிலும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைபெறும் என்று அமைச்சு எதிர்பார்க்கிறது.

கூப்பன் வைத்திருப்பவர்கள் தங்களுக்குரிய துணியை, கூட்டுறவுக் கடைகளிலோ அல்லது கூட்டுறவுச் சங்கம் நடத்தும் கடைகளிலோ அல்லது கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன சில்லறைக் கடைகளிலோ பெற்றுக்கொள்ளலாம். 104-வது இலக்க கூப்பன் துண்டைக் கொடுப்பதன் மூலம் ஒரு நபருக்கு 4 யார் துணி கிடைக்கும். கூப்பன் மூலம் துணி பெறும் திட்டம் ஜூன் மாதம் 30-ம் திகதிவரை நீடிக்கும்.

---

# 'சீனவுடன் சமாதானம் கொள்க'

## அமெரிக்காவுக்கு அதிபர் அயூப்கான் யோசனை

ராவல்பிண்டி, பெப். 22

கம்யூனிஸ்ட் சீனவுடன் அமெரிக்கா சமாதானமாக வாழ முன்வரவேண்டுமென்றும் இருநாடுகளிடையேயும் நேச உறவுகள் இருக்கவேண்டுமென்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் சீனவுடனை கருத்து வேற்றுமைகளைக் களைந்தெறிந்துபுதிய உறவுகளை மேற்கொள்ள அமெரிக்கா முன்வரவேண்டுமென்றும் அதிபர் அயூப் யோசனை தெரிவித்துள்ளார்.

சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயின் பாகிஸ்தான் விஜயத்திற்குப்பின்னரே அதிபர் அயூப்கான், அமெரிக்காவுக்கு இந்தவிதமான யோசனையைக் கூறியுள்ளார்.

சீனவும் அமெரிக்காவும் நட்புநாடுகளாக வாழ தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளப்போவதாகவும் இந்தவிதமான ஓர் நட்பணியாற்ற தாம் தயாராகவிருப்பதாகவும் அதிபர் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

மண்டல சார்பற்ற மகாநாடு பற்றி அவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில்; மண்டல சார்பற்ற மகாநாடுகள் எதையும் கூட்டுவதில் எவ்வித தகராறும் தீர்ந்து விடாதென்றும் மண்டலசார்பற்ற மகாநாடுகளினுல் எதையும் சாதிக்க முடியாதென்றும் கூறினர். மண்டல சார்பில்லாத நாடாக எந்த நாடும் இருக்காது-இருக்கவில்லை என்றும் அவர் சொன்னுர்.

# யாழ். ஆஸ்பத்திரி நோயாளா கவலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளர்பலர் தமக்கு டாக்டர்கள் எழுதும் மருந்துகளும், முட்டை, தோடம்பழம் முதலியவையும் கொடுக்கப்படுவதில்லையென கவலை தெரிவித்துள்ளார்கள்.

டாக்டர்கள் எழுதுவது என்ன என்பது விளங்கிக்கொள்ள முடியாதிருப்பவர்கள் தமக்கு இவை எழுதவில்லைப் போலிருக்கிறது என்று பேசாது இருந்துவிடுவதாகவும் விஷயம் விளங்கியவர்கள் இதுபற்றி ஆட்சேபம் கிளப்பிப்பின் இவற்றைப் பெற்றுக் கொள்வதாகவும் அறியப்படுகிறது. இதனுல் அதிகமாக ஏழை நோயாளிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் தேனீர் மிகமோசமாக இருப்பதாகவும் பலர் இதை வெளியே ஊற்றிவிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ. 75 அபராதம்

புங்குடுதீவு ஆறும்வட்டார வாசியான கே. துரைச்சாமி என்பவரை அடித்துக் காயப்படுத்தியதாக அத்த வட்டார வாசிகளான சண்முகம் தம்பு, சண்முகம் இளையதம்பி, சண்முகம் ஐயம்பிள்ளை ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது.

எதிரிகள் தரப்பில் புரக்டர் பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. ரி. கணேசலிங்கமும், வழக்காளி சார்பில் புரக்டர் திரு. வி. கே. சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. ஆனந்தகுமாரசாமியும் ஆஜராகினர்.

விசாரணையின் பின் நீதிபதி முதலாவது எதிரி சண்முகம் தம்புவைக குற்றவாளியாகக் கண்டு 75 ரூபாய் அபராதமும் கோடுகலையும் வரைரிமாண்டும் விதித்து, இரண்டாம், மூன்றும் எதிரிகளை விடுதலை செய்தார்.

# மானிப்பாயில் கென்னடி திரைப்படக்காட்சி

சுளிபுரம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஐக்கிய நாடுகள் சங்க ஆதரவில் சமூகசோதி சி. தியாகராசா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை மாலை மானிபபாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலம் சென்ற அதிபர் கென்னடியின் திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட இருக்கின்றது.

# ஓய்வு பெறுகிருர்

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் கடந்த 18 வருடகாலமாக சிரேஷ்ட தமிழாசிரியராகக் கடமையாற்றும் முத்தமிழ் ஆசிரியர் திரு. க. நீ. சுவக்கீம்பிள்ளை அடுத்தமாதம ஆறும் திகதிமுதல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகிருர்.

அறுபது வயதுள்ள திரு. சுவக்கீம்பிள்ளை முன்னர் மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியில் பிரதம தமிழாசிரியராகவும் கலகா ஆங்கில பாடசாலையின் தலைமையாசிரியராகவும்கடமையாற்றினுர்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்-1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.